பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2039 கார்த்திகை 16 திங்கட்கிழமை (01.12.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:005

# புலிகள் சரண் அடைந்தால் மட்டுமே அவர்களுடன் அரசு பேச்சு நடத்தும்

## இந்தியாவிடம் இலங்கை எடுத்துரைப்பு

கொழும்பு, டிசெம்பர் 1

விடுதலைப்புலிகள் தம்மிடம் உள்ள ஆயுதங்களைக் களைந்து, சரண் அடைந்தால் மட்டுமே அரசாங்கம் அவர்களுடன் பேச்சு நடத்தும். இந்த நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை .

இவ்வாறு இலங்கை அரசின் சார்பில், மூத்த அமைச்சர்களில் ஒருவரான டி.எம்.ஜயரத்தின நேற்று கொழும்பிலுள்ள இந்திய பிரதித் தூதுவரைச் சந்தித்து எடுத்துரைத்துள்ளார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)



## மேஜர் ஜெனரல் மீது இராணுவ நீதிமன்ற விசாரணை இவ்வாரம்

கொழும்பு, டிசெ.1

இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக மேஜர்ஜெனரல் ஒருவர் இராணுவ நீதிமன்றில் விசாரணைக்கு நிறுத்தப்படவிருக்கின்றார் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

மேஜர் ஜெனரல் பராக்கிரம பன்னிப்பிட்டியவே எதிர்வரும் 4ஆம் திகதி மேஜர்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஆறு இலங்கைத் தமிழர்களிடம் சென்னையில் கியூ பிரிவு விசாரணை

### மும்பைத் தாக்குதல் எதிரொலி

சென்னை, டிசெ.1

சென்னையிலுள்ள விடுதியொன்றில் தங்கியிருந்த இலங்கையர் 6 பேரிடம் பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மும்பையில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து தமிழகம் முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தின் ஈழத்தமிழர் ஆதரவு அலையை கருணாநிதியால் கூட இனித் தடுக்கமுடியாது!

### அங்கு கிடைத்த பட்டறிவை மஹிந்தவிடம் விளக்கினாராம் ரணில்

கொழும்பு, டிசெ.1

தமிழ்நாட்டில் இலங்கைத் தமிழர் ஆதரவு உணர்வலை மிக வேகமாகப் பரவி வருகிறது எனவும், தமிழக முதலமைச்சரால் கூட அதனைத் தடுத்து நிறுத்த முடியாதெனவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார்.

தமிழ் நாட்டின் கிராமப் பகுதிகளில் வலுவாகவுள்ள கம்யூனிஸ்ட் கட்சி, யுத்தநிறுத்தம் குறித்து தீவிர அழுத்தத்தைக் கொடுத்து வருவதாகவும் தமிழ் நாட்டில் இது கடும் தாக்கத்தை ஏற் படுத்தியுள்ளதாகவும் ரணில் தெரிவித் துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த வாரம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தொலைபேசியில் உரையாடினார். அதன்போது தமிழ் நாட் டில் காணப்படும் உணர்வலைகள் குறித்து இருவரும் ஆராய்ந்தனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் கைதானோரில் 117 பேர் நேற்று விடுவிப்பு

கொழும்பு, டிசெ. 01

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பெரும் தேடுதல் வேட்டையின்போது சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்ட 124 பேரில் 117 பேர் நேற்று விடுவிக்கப்பட்டனர் என பொலிஸ்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் ராஜினாமா

### ஆனால் பிரதமர் அதனை ஏற்கவில்லை



புதுடில்லி, டிசெ.1

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் தனது பதவியை நேற்றுமாலை ராஜினாமாச் செய்துள்ளார். மும்பைத் தாக்குதலுக்கு தார்மீகப் பொறுப்பேற்று, உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டீல் தமது பதவியை ராஜினாமா செய்தார். அவரைத்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கைப்பற்றிய இடங்களைப் பாதுகாப்பதற்கு படைத்தரப்புக்கு ஆள் சேர்க்க நடவடிக்கை

கொழும்பு,டிசெ. 1

வடக்கில் யுத்தத்தின்போது கைப்பற்றப்பட்ட இடங்களைத் தக்கவைத்துக் கொள்ள 50 ஆயிரம் பேர் கொண்ட விசேட படையொன்றை அமைக்க அரசு தீர்மானித்துள்ளதாகத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பொறுப்பை நடைமுறைப்படுத்தும் பொருட்டு (16 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் இனஅழிப்பை வெளிப்படுத்தி ஜேர்மனியில் தமிழாலயம் கொடிவாரம்

கொழும்பு, டிசெ. 01

இலங்கை அரசின் இன அழிப்பையும், மனித உரிமை மீறல்களையும் வெளிப்படுத்தி, கண்டனத்தைத் தெரிவிக்கும் ஒரு செயற்பாடாக ஜேர்மனியில் கொடிவாரம் ஒன்று அனுஷ்டிக்கப்படுகின்றது.

ஜேர்மனியிலுள்ள தமிழ்க் கல்விக் கழகத்தின் 130 தமிழாலயங்களைச் சேர்ந்த 6,500 மாணவர்களும் அவர்களின் 950 இற்கும் மேற்பட்ட (16 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரை நோக்கிப் படகில் சென்ற 26 பேர் பருத்தித்துறை கடற்பகுதியில் வைத்துக் கைது

மந்திகை, டிசெ.1

பருத்தித்துறை கடற்பகுதியில் வைத்து கடற்படையினரால் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை 26 பேர் கைது செய்யப்பட்டனர்.

சுண்டிக்குளத்தில் இருந்து மன்னாருக்குப் படகில்சென்ற இவர்கள் திசை மாறி பருத்தித்துறை கடற்பரப்புக்குள் வந்த போது கைது செய்யபட்டனர்.

சம்பந்தப்பட்ட 26 பேரும் பருத்தித்துறை பொலிஸாரால் நேற்று பருத்தித்துறை

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளத்தால் அள்ளப்பட்ட படையினர் மூவரின் சடலங்கள் சனியன்று மீட்கப்பட்டன

கொழும்பு, டிசெ.1

கேரதீவில் வெள்ளத்தால் அள்ளிச் செல்லப்பட்ட படையினரில் மூவரின் சடலங்கள் சனிக்கிழமை மீட்கப்பட்டுள்ளன என்று இராணுவத்தரப்பு நேற்றுத் தெரிவித்தது.

வெள்ள அகதிகளுக்கு நிவாரணப் பணி மேற்கொண்ட போது இவர்கள் வெள்ளத்தால் அள்ளிச் செல்லப்பட்டனர் என்று கூறப்பட்டது. (16 ஆம் பக்கம் பார்க்க)

## அலம்பிலில் நேற்றுக் கடும் மோதல்

முல்லைத்தீவிற்கு தெற்கே 10 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள அலம்பில் பகுதியில் நேற்று விடுதலைப்புலிகளுக் கும் படையினருக்கும் இடையே கடும் மோதல் இடம்பெற்றதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

இராணுவப் பிரதேசத்திற்குள் ஊடுருவிய விடுதலைப்புலி(16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் இராணுவ நடவடிக்கை ஸ்தம்பிதம்; ஆனால் முன்னெடுப்புக்குத் தடங்கல் இல்லை – நாணயக்காரா



கொழும்பு, டிசெ. 01

வடபகுதியில் நிலவும் சீரற்ற காலநிலையால் போர்க் களமுனைகளிலுள்ள படையினரின் இராணுவ முன்னெடுப்புக்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அத்துடன் படையினருக்கான ஆயுதங்கள் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விநியோகங்கள் தடைப்பட்டுள்ளன என்றும் வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு களமுனைகளிலும் இராணுவ முகாம்கள் மற்றும் பதுங்கு குழிகளிலும் தங்கியுள்ள இராணுவத்தினரை மாற்று இடங்களுக்கு அழைத்துச் செல்ல படைத்தரப்பினர் கடந்த சில நாள்களாகவே பல்வேறு நடைமுறைகளைக் கையாண்டு வருகின்றனர் எனவும் அத்தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மஹிந்த – ரணில் இவ்வாரம் சந்திப்பு

கொழும்பு, டிசெ.1

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவும் இவ்வாரம் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளனர். (16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# குடாநாட்டு வெள்ள நிவாரணபணிக்கு 10 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், டிசெ.1

குடாநாட்டில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி உதவிகளை வழங்க 10 மில்லியன் ரூபாவை மீள்குடியேற்ற அனர்த்த நிவாரண அமைச்சு வழங்கியுள்ளது.

இந்த நிதிஉதவியில் 3 மில்லியன் ரூபா செயலகத்துக்கு கிடைத்துள்ளது என்றும் மேலும் 7 மில்லியன் ரூபா இன்று கிடைக்கும் என்றும் அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களில் 4 ஆயிரம் குடும்பங்கள் மீண்டும் தமது இருப்பிடங்களுக்கு திரும்பிவிட்டன என்றும் அரச அதிபர் தெரிவித்தார்.

மீட்புப் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் தமது திணைக்களங்களுக்குட்பட்ட பணிகளை மேற்கொண்டு வருகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கண்ணீர் அஞ்சலி

காங்கேசன்துறை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றும் எமது சக ஊழியர் நா.பத்மராசா அவர்களின் தந்தை

அராலியூர் **நாகமுத்து நாகலிங்கம்**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
காங்கேசன்துறை.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை அபிவிருத்திச்சங்க நிர்வாக உறுப்பினர் க.நந்தகுமார் அவர்களின் பாசமிகு தாய்

**திருமதி கயிலாசபிள்ளை பரமேஸ்வரி**

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவிப்பதோடு தாயாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை. (சி/555813) பாடசாலை அபிவிருத்திச்சங்கப் பழைய மாணவர் சங்கம்.

## ஆறாத துயருடன் அஞ்சலிக்கின்றோம்



**ஸ்ரீமான் சபாபதி கந்தசாமி**
(ஓய்வு நிலை பிரதி அதிபர்,
யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி)

எமது ஆசிரியர் க.சிவசங்கர் அவர்களின் தந்தையான இவர் எமது கல்லூரியின் உயர்வுக்காக அன்று முதல் இன்று வரை அயாராது உழைத்த உத்தர் அவரின் திடீர் மறைவு எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்துகின்றது.

அன்னாரின் இழப்பால் தவிக்கும் குடும்பத்தவருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு ஆத்ம சாந்திக்காக அஞ்சலிக்கின்றோம்.

-கல்லூரிச் சமூகம்-
(யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி).

## உடுவில் சிவன் கோயில் கும்பாபிஷேகம் புதனன்று

வரலாற்றுப் பெருமை மிக்க உடுவில் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயப் புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகலில் நடைபெறவுள்ளது. ஆலயத்தின் பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ சி.முத்துஸ்சுவாமிக் குருக்களின் தலைமையில் நடைபெறவுள்ள இக் கும்பாவிஷேகத்திற்கு இணுவில் தர்ம சாஸ்தா குருகுல அதிபர் வேதாகம ஞானபானு தா.மகாதேவக் குருக்கள் சர்வபோதகாசாரியாராகக் கடமையாற்றுவார்.

யாழ்.பல்கலைக்கழக வாழ் நாள் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் ஆசியுரையையும் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் வாழ்த்துரையும் வழங்குவர். (அ)

## மண்டைதீவிலிருந்து விசேட பஸ் சேவைகள்

மண்டைதீவுக்குச் செல்லும் மக்களினதும் அரச ஊழியர்கள், ஆசிரியர்களதும் போக்குவரத்து வசதிகருதி பண்ணை மண்டைதீவுச் சந்தியில் இருந்து பஸ் போக்குவரத்துச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பண்ணை - மண்டைதீவு சந்தியில் இருந்து காலை 8.15 மணிக்கும் மண்டைதீவில் இருந்து காலை 8.45 க்கும் மண்டைதீவுக்கு பி.ப. 2 மணிக்கும் அங்கிருந்து பண்ணைச் சந்திக்கு பி.ப. 2.30 மணிக்கும் பஸ் சேவைகள் இடம்பெறும்.

பண்ணையில் இருந்து மண்டைதீவுக்கான கடைசிப் படகுச் சேவை பி.ப. 5.15க்கு நடைபெறும். (1-111)

## புங்குடுதீவில் மண்எண்ணை தட்டுப்பாடு

புங்குடுதீவுப் பகுதியில் மண்ணெண்ணைக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் அங்குள்ள மக்கள் மண்ணெண்ணையைப் பெற்றுக் கொள்வதற்காக வேலணைக்குச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புங்குடுதீவு எரிபொருள் நிரப்பு நிலையத்தின் எண்ணைத் தாங்கிக்குள் மழைநீர் புகுந்து கொண்டதால் அங்கிருந்த மண்ணெண்ணையைப் பயன்படுத்த முடியாதிருப்பதாகவும் கூறப்பட்டது.

இதேவேளை வேலணையில் ஏற்பட்டுள்ள டீசல் தட்டுப்பாட்டையடுத்து உடனடியாக அங்கு டீசல் எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகின்றது. (202-111)


## வீடு வாடகைக்குத் தேவை

நல்லூர் கோயில் வீதியை மையமாகக் கொண்டு சகல வசதிகளும் (கார் தரிப்பிடம் உட்பட்ட) உடைய வீடு அரச உயர் பதவி வகிக்கும் குடும்பம் ஒன்றுக்கு வாடகைக்குத் தேவை.

தொடர்பு:- 077 7291602, 077 9914066, 222 8080
(பி.ப. 6 மணிக்கு பின்).


## மரண அறிவித்தல்கள்

### பாலசுப்பிரமணியம் அருண்

(உரிமையாளர், ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ், நெல்லண்டை வீதி, தும்பளை)



தும்பளை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் அருண் நேற்று முன்தினம் (29.11.2008) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் பாலசுப்பிரமணியம்- ஜெயசூரியா தம்பதியினரின் கனிஷ்ட புதல்வனும், திருச்செல்வம், கீதா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஸ்ரீ உமாபதி, தாரணி ஆகியோரின் மைத்துனரும் அபிராமி, ஆரணி, சிவகுமார் ஆகியோரின் பாசமிகு மாமனும் வினோவின் சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

யக்கோவளை ஒழுங்கை, தும்பளை,
பருத்தித்துறை. T.P. 021 226 3448

தகவல் :
குடும்பத்தினர்.

### முத்தையா கணபதிப்பிள்ளை



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா கணபதிப்பிள்ளை நேற்று(30.11.2008) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் மு.செல்லையா (இளைப்பாறிய கனிஷ்ட அதிபர், யாழ். அருணோதயக் கல்லூரி), கனகம்மா, காலஞ்சென்ற சேதுப்பிள்ளை, செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஸ்கந்தேஸ்வரன், சிறிரஞ்சனி, பத்மநாதன், ஜெகநாயகி, செல்வவிநாயகம், சிறிகாந்தன், கருணாகரன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.12.2008) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சு வீதி,
மாரட்டி, அளவெட்டி.

தகவல்:
மு.செல்லையா
(சகோதரன்).

### திருமதி பரமேஸ்வரி கயிலாசபிள்ளை



அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி கயிலாசபிள்ளை நேற்று (30.11.2008) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் சபாபதிப்பிள்ளை கயிலாசபிள்ளை, (ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், கல்வித்திணைக்களம், திருகோணமலை, ஓய்வூதியப் பிரிவு மாகாண பொதுநிர்வாக அமைச்சு, திருகோணமலை) அவர்களின் அன்பு மனைவியும் விஜயகுமார் (அதிபர், நவாலி ஸ்தான அ.மி.த.க. பாடசாலை, மானிப்பாய்), காலஞ்சென்ற திருமதி சரோஜினிதேவி குலநாயகம் (ஆசிரியை) மற்றும் பாலகுமார் (ஜேர்மன்), நந்தகுமார் (கல்வி அமைச்சு, வடமாகாணம்), கலாதேவி (ஆசிரியை, யாழ்.மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் திருமதி கௌரிமனோகரி (ஆசிரியை, அராலி கிழக்கு அ.மி.த.க. பாடசாலை), வே.குலநாயகம் (செயலாளர், பிரதேசசபை, கரவெட்டி), பவானி (ஜேர்மன்), திருமதி சிரோமி (ஆசிரியை, உயரப்புலம் மெ.மி.த.க. பாடசாலை, ஆனைக்கோட்டை) ஆகியோரின் அன்பு மாமியாரும் விதுரன், குபேரன், ரஜிலதா, அபிதாரணி, அனித்தா, ரூபினி, வேதாஷினி, வர்ணவி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற மு.கனகரத்தினத்தின் அன்புச் சகோதரியும் திருமதி சீவரத்தினம், முருகமூர்த்தியின் (அவுஸ்திரேலியா) மைத்துனியும், காலஞ்சென்ற மங்கையர்க்கரசி கனகரத்தினத்தின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2008) பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, தகனக்கிரியை அராலி பூனாவடை இந்து மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உபதபாற்கந்தோர் வீதி,
அராலி.

தகவல்:
கயிலாசபிள்ளை (கணவர்),
விஜயகுமார், நந்தகுமார் (மகன்மார்).

### சின்னையா இராசலிங்கம்

[திருநெல்வேலி ரூபன் ஸ்ரோர்ஸ் உரிமையாளரின் தந்தை]



கொய்யாத் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், தாழையடி ஒழுங்கை, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா இராசலிங்கம் நேற்று (30.11.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இ.மணிமேகலையின் அன்புக்கணவரும், அமிர்தவல்லி, ராஜேஸ்வரி, காந்தரூபன்(லண்டன்), சாந்தரூபன் (சுவிஸ்), சுவேந்திரன் (லண்டன்), சுரேஸ், சசிகலா, ரதிகா, கிரிதரன், காலஞ்சென்ற லிங்கேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிறீரங்கநாதன், சண்முகநாதன், தங்கவடிவேல், நவீந்திரன், சர்வேஸ்வரி, மேகலை, சோபா, ரஜிதா, பிரதீபா ஆகியோரின் அன்பு மாமனும், பிரசாந், பிருந்தா, பிரியங்கா, சஞ்சிகா, நௌசியா, பிரவீணன், கிரிசிகன், கௌதமன், கனுசிகா, சரணியா, சுதர்சன், தர்மிளா, வக்சலா, நிலக்சன், சுகிர்தன், பவித்திரன், டிலக்சன், டிவாகர், திலக்சனா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இதிக்கிரியைகள் இன்று(1.12.2008) திங்கட்கிழமை பிற்பகல் 2மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

No. 10/1, தாழையடி ஒழுங்கை,
திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.
தொ.பே: 077 127 2338, 060 221 9030.

தகவல்:
பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### மயில்வாகனம் இராமச்சந்திரன் (பப்பா - ஓய்வுபெற்ற ஆசிரியர்)



கம்பர்மலை, பாரதி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் இராமச்சந்திரன் நேற்று முன்தினம் (29.11.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - அன்னம்மா தம்பதியினரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான இராசதுரை - மாணிக்கம் தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற சிவகாமி (மம்மி) அவர்களின் அன்புக் கணவரும் வதனபாஸ்கரி (அவுஸ்திரேலியா), வதனலீலா, பிறேமகுமாரி (கம்பர்மலை), பிறேமதி (லண்டன்), இராஜ்மோகன் (லண்டன்), இராஜ்சொரூபன் (கனடா), இராஜ்முரளி (கொம்மந்தறை, ஊர்காவற்றுறை நீதிமன்றம்) ஆகியோரின் தந்தையும் சபாரத்தினம், இரத்தினசிகாமணி (கம்பர்மலை), காலஞ்சென்ற குலசிகாமணி (சுன்னாகம்) ஆகியோரின் சகோதரரும் சௌந்தர்ராஜன் (அவுஸ்திரேலியா), தேவராஜா (சுன்னாகம் C.E.B), அமிர்தகுமார், விபுலானந்தன் (கம்பர்மலை), பாமதி (லண்டன்), சந்திரகுமாரி (கனடா), இராஜேஸ்வரி (கொம்மந்தறை) ஆகியோரின் மாமனாரும் ஜெயந்தன், ஜெயப்பீரித்தா, ஜெயப்பிரிந்தன், சுலக்சன், கௌதமன், கோமகன், ஜஸ்திகா, லக்ஸ்மன், நிவேதா, பபிதரன், மதுசிகன், தருணிகா, கேமப்பிரியா, சர்மிலா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பாரதி வீதி,
கம்பர்மலை.

(80376)

தகவல்:
குடும்பத்தினர்.

## இடம்பெயர்ந்தோருக்கு 'சொன்ட்' நிறுவனம் உதவி

யாழ்ப்பாணம், டிசெ.1

'நிஷா' சூறாவளி மற்றும் பெருவெள்ள அனர்த்தத்தால் இடம்பெயர்ந்த மக்களுக்கு அபிவிருத்திக்கான சமூக அமைப்புகளின் வலையமைப்பு (சொன்ட்) நிறுவனம் உணவு உதவியை வழங்கியது.

யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுகளில் இடம்பெயர்ந்த சுமார் 2,500 பேருக்கு இரு நாள்களுக்கு சமைத்த உணவுகளை மேற்படி நிறுவனம் வழங்கியது. (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# 'நிஷா' சூறாவளி வெள்ளத்தால் வன்னியில் பேரவலம் ஆனால் தொண்டுப்பணிக்குத் தொடர்ந்தும் தடை

'நிஷா' சூறாவளி வன்னியில் ஏற்படுத்திய பெரு வெள்ளத்தால் அங்கு பல நூறாயிரக் கணக்கில் மக்கள் இடம்பெயர்ந்து அவலப்படுகின்றனர் என்ற தகவல் நெஞ்சை நெருடுகின்றது.

'பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த' மாதிரி, யுத்த அனர்த்தங்களால் அல்லறபட்ட வன்னி மக்களை இயற்கையும் சேர்ந்து வஞ்சித்து பேரவலப்பட வைத்திருக்கின்றது என்ற செய்தி மனதை உலுப்புகின்றது.

வன்னிப் பெரு நிலப்பரப்பு மீது கொழும்பு அரசு பெரும் எடுப்பில் தொடுத்துள்ள கொடூர யுத்தம் காரணமாகத் தமது வீடு, வாசல்கள், நிலபுலங்களை எல்லாம் விட்டு வெளியேறி, உடுத்த உடையோடு இடம்பெயர்ந்த பல நூறாயிரம் மக்கள், காடுகளில் மரங்களின் கீழும் புதர்களிலும் ஒதுங்கி அவலப்பட்டுக் கொண்டிருந்த சமயத்திலேயே, நிஷா சூறாவளி என்ற இயற்கை அரக்கனும் வன்னியைத் தாக்கி பேரழிவை ஏற்படுத்தியிருக்கிறான்.

ஏற்கனவே இடம்பெயர்ந்து, வெள்ளம் தேங்கக் கூடிய தாழ் நிலங்களில் தங்கியிருந்த இந்த மக்களை நிஷா சூறாவளியும் அதனால் எழுந்த பெரு வெள்ளமும் சேர்ந்து ஒரேயடியாகப் பதம் பார்த்திருக்கின்றன.

பல்லாயிரக் கணக்கில் அவலப்பட்டு, அல்லல் பட்டு தவிக்கும் வன்னி மக்களுக்கு - உண்ண உணவின்றி, குடிக்க சுத்தமான தண்ணீரின்றி, உடுக்க உடையின்றி, தங்க இடமின்றி, சுகாதார மற்றும் மருத்துவ வசதிகளின்றி அல்லாடும் அத்தமிழ் மக்களுக்கு - அவசர அவசரமாக அத்தியாவசிய மனித நேய சேவைகளை விரைந்து வழங்குவது காலத்தின் கட்டாயமாகும்.

ஆனால், அந்த மக்களைத் தனது படைகளின் ஆக்கிரமிப்பு முற்றுகைக்குள் வைத்திருக்கும் கொழும்பு அதிகார வர்க்கமோ வன்னி அவல நிலை குறித்தோ அங்கு எழுந்துள்ள மனிதப் பேரவல நெருக்கடி பற்றியோ சிரத்தையே காட்டாமல் வன்னியைக் கைப்பற்றி, புலிகளை அழித்தொழிப்பது குறித்து மட்டும் இச்சமயத்திலும் பிதற்றிக் கொண்டிருக்கின்றது.

வன்னியில் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடி நிலையை ஒட்டி, அந்த மக்களுக்கு விரைந்து உதவுவதற்கு இவ்விடயத்தில் அனுபவமும் தேர்ச்சியும் பெற்ற - பக்கச்சார்பற்ற - மனிதநேய முகவர் அமைப்புகள் தயாராகக் காத்திருக்கின்றன. ஆனால், அந்த அவசர - அவசிய - மனிதநேய உதவிகளைவழங்கவிடாமல் இலங்கை அரசின் தடை உத்தரவு குறுக்கே இடைஞ்சலாக நிற்கிறது.

மாவிலாறு அணைக்கட்டு மூடப்பட்டதால் ஒருசில ஆயிரம் சிங்கள விவசாயிகளின் வயல் நிலங்கள் வாடுகின்றன எனத் தெரிவித்து - அதற்கு நியாயம் பெறுவதற்காக - கொடூர யுத்தத்தையே ஆரம்பித்த கொழும்பு அரசு, வன்னியில் பல்லாயிரக் கணக்கில் அப்பாவித் தமிழ் மக்கள் பெரும் சூறாவளி வெள்ளத்துள் சிக்கிப் பரிதவிக்கும்போது கூட மனிதநேய தொண்டுப் பணியாளர்களை வன்னிக்குள் செல்ல விடாது தடுக்கும் தனது கட்டுப் பாட்டைத் தொடர்ந்து நீடித்துத் தனது பௌத்த - சிங்களப் பேரினவாதப் போக்கை வெளிப்படையாகவே உறுதிப்படுத்தி நிற்கின்றது.

பெரு வெள்ளத்தினால் சூழப்பட்டு, மீளவே முடியாத பேரவலத்துக்குள்ளும் சொல்லொணா துன்ப துயரங்களுக்குள்ளும் வன்னி மக்கள் சிக்குண்டு பேரிடர்படும் இச்சமயத்தில், அந்த மக்களுக்கு அவசர - அவசிய - மனிதநேயத் தொண்டு உதவிகள் கிட்டுவதற்கு வசதியாக அத்தகைய மனிதநேய உதவிப் பணியாளர்கள் வன்னிக்குச் செல்வதற்குத் தான் விதித்திருந்த தடையை நீக்குவது குறித்து மீள ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டிய நேரம் கொழும்பு அரசுக்கு வந்துள்ளது என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய இயக்குநர் பிரட் அடம்ஸ் கூறியிருக்கின்றார்.

இச்சமயத்தில் சரியான முடிவை எடுப்பதற்கு அவர்கள் தவறுவார்களேயானால், அதனால் ஏற்படும் உயிரிழப்புகள், பாதிப்புகள் போன்றவற்றுக்கான பொறுப்பையும் (குற்றத்தையும்) கொழும்பு அதிகார வர்க்கமே ஏற்கவேண்டி நேரும் என்றும் அடம்ஸ் குறிப்பிட்டிருக்கின்றமையும் கவனிக்கத்தக்கது.

"இலங்கை அரசு, உதவி வழங்கும் நிறுவனங்களுடனான தனது விளையாட்டை இத்துடன் நிறுத்திக்கொண்டு, மக்களின் உயிரைக் காக்கும் அத்தியாவசியப் பணியை உதவி வழங்கும் மனிதநேய அமைப்புகள் விரைந்து ஆற்றுவதற்கு இடமளித்து, அதற்கேற்ப தனது தடை நடவடிக்கையை விலக்கிக் கொள்ளவேண்டும்" - என அடம்ஸ் மேலும் கோரியிருக்கின்றார்.

தனது ஆக்கிரமிப்பு இலக்கைக் கொடூர யுத்தம் மூலம் எப்படியும் நிறைவேற்றிக் கொள்ளவேண்டும் என்ற கங்கணத்துடன் போர்வெறித் தீவிரத்தில் சன்னதம் கொண்டு ஆடுகின்ற இலங்கை ஆட்சித்தரப்பின் காதுகளில் இந்த வேண்டுகோள் விழுமா? அது துர்லபம் என்பதே யதார்த்தமாகும்.

# கிளிநொச்சி நோக்கிய நகர்வில் படையினர் புலிகளின் கடும் எதிர்ப்பை எதிர்கொள்கிறார்கள்



**'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை களநிலை ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் 30.11.2008 அன்று அப்பத்திரிகையில் எழுதியுள்ள கட்டுரையின் சிலபகுதிகள் இங்கு தரப்படுகின்றன.**

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் வருடம்தோறும் நிகழ்த்தும் மாவீரர் தின உரையை கவனமாக அவதானித்து வந்துள்ளவர்கள் இந்தமுறை அவரது உரையில் ஒரு மாற்றத்தை கவனித்திருப்பார்கள். புலிகளின் தலைவர் தமது ஆதரவாளர்களான பொதுமக்கள் கூடியிருக்கும் அவையின் மத்தியில் தமது உரையை நிகழ்த்துவதில்லை என்பது தெரிந்தவிடயம். இருந்தும் இம்முறை அவரது இராணுவத் தளபதிகள் கடந்த முறையைப் போன்று அவருக்கு அருகாமையில் இருக்கவில்லை. அப்போதெல்லாம் வெளியிடப்பட்ட புகைப் படங்களில் புலிகளின் முக்கிய தளபதிகள் அவருடன் இருந்தார்கள். இம்முறை அவர்கள் போர்முனைகளில் தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்க வேண்டும். ஒருசிலர் அவருடன் இருந்திருந்தாலும் புகைப் படங்களில் காணப்படவில்லை. தமிழ் இணையத்தளங்களில் வெளியான படங்களில் மாவீரர் பணியகத்தின் பொறுப்பாளர் பொன்.தியாகம் மட்டுமே காணப்பட்டார்.

புலிகளின் தலைவர் பிரபாகரனின் பேச்சு பெரும் பாலும் பாதுகாப்பு சம்பந்தமாகவும் அதை யொட்டிய விடயங்கள் தொடர்பாகவும் மட்டுமே அமைந்திருந்தது. இப்பொழுது அரசினால் மேற்கொள்ளப் பட்டுவரும் போர் நடவடிக்கைகளைக் கடுமையாகக் கண்டிக்கும் தொனியிலேயே பேச்சு அமைந்திருந்தது. "கடந்த காலங்களில் நடந்துள்ளவைகளோடு ஒப்பிடுகையில் இன்றைய சவால்கள் புதியனவாகவோ, பெரியனவாகவோ காணப்படவில்லை. எம்மக்களின் ஒற்றுமைப்பட்ட சக்தியின் மூலமாக இந்தச் சவால்களை நாம் எதிர்கொள்வோம்" என்று அவர் கூறினார். "இராணுவ வெற்றி என்ற கனவுலகில் அரசாங்கம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. அது ஒரு கனவுலகம். அதிலிருந்து அரசாங்கம் விழிப்படையும். அது மட்டும் நிச்சயம்" என்றும் பிரபாகரன் கூறியுள்ளார்

ஒரு வாரத்துக்கு முன்னர் தமிழக சஞ்சிகையொன்றுக்கு அளித்திருந்த ஒரு பேட்டியில் "கிளிநொச்சி யைக் கைப்பற்றுவதென்பது ஜனாதிபதி ராஜபக்ஷவின் பகற்கனவு" என்று பிரபாகரன் கூறியிருந்தார்.

இதுவரை காலமும் தற்காப்பு மோதல்களிலேயே பெரும்பாலும் ஈடுபட்டு வந்துள்ள விடுதலைப்புலிகள் இனிமேல் வலுவான எதிர்த்தாக்குதல்களில் ஈடுபடப் போகிறார்கள் என்பதை அவரது பேச்சு மறைமுகமாகச் சுட்டிக்காட்டுகிறது என்று எண்ணத் தோன்றுகின்றது. இதனை ஒப்புக் கொள்வதுபோல் விமானப் படைத்தலைவர் எயார் மார்ஷல் பெரேரா கருத்து வெளியிட்டிருக்கின்றார். "விரத்தியுற்றுள்ள நிலையில் அவர்கள் ஒருங்கிணைந்த முறையில் தரை, வான், மற்றும் கடல் தாக்குதல்களை மேற்கொள்ளும் வாய்ப்பிருக்கின்றது" என்று கூறியுள்ளார் அவர். இந்த நிலைமை குறித்து அமைச்சரும் பாதுகாப்புத்துறைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல கூறுகையில், "எங்களுக்குத் தெரியும். நாங்கள் எதிர்பார்க்கின்றோம். எந்தவித அச்சுறுத்தலையும் எதிர்கொள்ள நாங்கள் தயாராகி வருகிறோம்" என்று கூறியுள்ளார் அவர்.

யுத்தத்தை நிறுத்தி தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண விரும்புவதாக பிரபாகரன் அறிவித்துள்ள அதே வேளை எதிர்காலத்தில் அரசியல் மாற்றங்கள் ஏற்படும் என்று எதிர்பார்ப்பது வீண் வியர்த்தமே வெளியிடப்பட்ட அதனால் சிங்கள தேசத்தை மீண்டும் நம்பி ஏமாற்றமடைய எமது மக்கள் தயாராய் இல்லை" என்று கூறினார்.

"இன்று இந்தியாவில் பெரும் மாறுதல்கள் இடம்பெற்று வருகின்றன. எமது போராட்டத்துக்கு ஆதரவான குரல்கள் இப்பொழுது மீண்டும் வலுவாக உரத்துக் கேட்கத் தொடங்கியுள்ளன. எமது போராட்டம் அங்கு ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான அறிகுறிகளும் தென்படுகின்றன. புறநிலைகளில் ஏற்பட்டுவரும் சாதகமான சூழ்நிலைகள் எமது உறவுகளை இந்தியப் பேரரசுடன் மீண்டும் புதுப்பித்துக்கொள்ள எமக்கு ஊக்கமளிப்பதாகவுள்ளது" என்றார்.

எமது போராட்டம் அங்கு ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான அறிகுறிகள் தெரிகின்றன என்ற வார்த்தைகளை புலிகளின் தலைவர் கூறிமுடிப்பதற்கு முன்பே அவருக்கு கூடாத செய்தியொன்று கிடைத்திருக்கிறது. வர்த்தகத் தலைநகரமான மும்பையில் வரிசையாக பயங்கரத் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இது சர்வதேச சமூகத்தைக் கோபமடையச் செய்துள்ளது. உலகத் தலைவர்கள் பலர் கண்டித்திருக்கிறார்கள். உலக வர்த்தக மையத்தின்மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்குப் பின் நடந்துள்ள மோசமான தாக்குதல் என்று 'நியூயோர்க் ரைம்ஸ்' வர்ணித்துள்ளது. 64 மணி நேரதாக்குதல்களில் 200 பேர்வரை கொல் லப்பட்டுள்ளார்கள்.

சர்வதேச சமூகத்தையும், இந்தியாவையும் நேசக்கரம் நீட்டி அழைக்கும் புலிகளுக்கு இது புதிய செய்தியாகும். இலங்கையில் இவ்வாறு சிவிலியன்கள் மீது நடத்தப்படும் பயங்கரவாத நடவடிக்கைகள் அல்லது சமூக வாழ்வினை சிதறடிக்கும் முயற்சிகள் அவர்களை ஓரங்கட்டுவதற்கே உதவும் என்பதுடன் எதிர் நடவடிக்கைகள் எடுப்பதற்கும் ஏதுவாகும். இந்தியாவுடன் ஆக்கபூர்வமான நட்புறவைக் கட்டியெழுப்புவதற்கும் இது உதவி புரியமாட்டாது.

அதேசமயம் இந்தியாவுடன் நட்புறவை வளர்த்துக் கொள்வதற்கான முயற்சி தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உட்பட தமிழர் நலன்கள் தொடர்பான தமிழ் சமூகத்தினருக்கு திருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

## மோதலில் சிலரைக் காணவில்லை

காங்கேசனில் கப்பல்கள் தரை தட்டின

காங்கேசன்துறை கடற்படைத் தளத்தின்மீது பலத்த புயற்காற்று வீசியமையால் இரு சரக்கு கப்பல்கள் துறைமுகத்துக்குள்ளேயே தரைதட்டிவிட்டன. இதில் ஒன்று சரக்கு இறக்குவதில் ஈடுபட்டிருந்தது, மற்றது சரக்கு இறக்குவதற்காகக் காத்திருந்தது. அதேபோல் 5 டோரா தாக்குதல் படகுகளும் பாதிப்புக்குள்ளாகின. ஒக்டோபரில் கடற்புலிகள் தாக்குதலில் சேதமுற்றிருந்த MV நிமவல கப்பல் மயிலிட்டிக்கு அப்பால் இழுத்து வரப்பட்டு நிறுத்தப்பட்டிருந்தது. அக்கப்பல் தரைதட்டியுள்ளதுடன் மேலும் அதிக சேதத்துக் குள்ளாகியுள்ளது.

வன்னியில் மழை வெள்ள நிலைமை நிஷா புயலின் காரணமாக மேலும் மோசமடைந்துள்ளது. துருப்புகளுக்கு பொருள்கள் சென்றடைவதிலும் காயமடைந்தவர்களை அப்புறப்படுத்துவதிலும் பெரும் இடர்களை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது.

முற்றுகை தொடர்கிறது

முன்னர் குறிப்பிட்டது போன்று கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளில் இராணுவ முற்றுகை தொடர்கின்றது. புலிகள் வசமுள்ள இடங்களில் மேலும் அதிகமானவற்றைக் கைப்பற்றும் முயற்சியில் படைகள் ஈடுபட்டு வருகின்றன.

## கள நிலைகளை மாற்றியமைத்து புலிகள் தாக்குதல்

அவர்கள் ஆறு முனை களில் நகர்ந்து வருகிறார்கள். செயல் அணி 1 மற்றும் இராணுவத்தின் 57ஆவது பிரிவினர் பூநகரி - கிளிநொச்சி வீதியில் நகர முயன்று பலத்த எதிர்ப்பினைச் சந்தித்து வருகின்றார்கள்.

மண் அணையும் குழியும் உள்ள ஓர் இடத்தில் பெரும் மோதல் இடம்பெற்று வருகின்றது. இருதரப்பிலும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. மோதலின்போது படையினர் சிலரைக் காணவில்லையென்று தெரிகிறது. வெள்ளப்பெருக்கு காரணமாய் புலிகள் தம்நிலைகள் சிலவற்றை பின்பக்கமாய் மாற்றி அமைத்துள்ளார்கள்.

(15ஆம் பக்கம் பார்க்க).

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை 17 | 02.12.2008 |
| | செய்வாய்க்கிழமை |
| திதி: | சதுர்த்தி |
| | காலை 06.44 வரை |
| நட்சத்திரம்: | உத்தராடம் |
| | மாலை 06.24 வரை |
| சுபநேரம்: | 10.45 - 12.15 |
| ராகுகாலம்: | 03.15 - 04.45 |

## HIV/AIDS தொற்றும் வழிகள்

- ★ HIV தொற்றுள்ள ஒருவருடன் ஏற்படுத்தப்படும் பாதுகாப்பற்ற பாலியல் தொடர்பு மூலம்
- ★ இருபால் சேர்க்கை
- ★ ஓரினச் சேர்க்கை
- ★ HIVதொற்றுக்குள்ளான ஒருவரது இரத்தம், இரத்தப்பாகங்கள் வேறொருவருடைய இரத்தத்துடன் நேரடியாகத் தொடர்புபடும் போது.
- ★ இரத்த மாற்றீடு
- ★ தொற்று நீக்கப்படாத தோலைத் துளைக்கும் உபகரணங்கள் (ஊசி, சத்திர சிகிச்சை உபகரணங்கள்)
- ★ சவர அலகு
- ★ HIV தொற்றுள்ள தாயிலிருந்து குழந்தைக்கு
  - கருவிலிருக்கும் போது (25%)
  - பிரசவத்தின் போது (45%)
  - தாய்ப்பாலூட்டும் போது (35%)

## HIV/AIDS தொடர்பான தகவல்கள் மற்றும் சேவைகளுக்கு...

- ★ HIV/AIDS தொடர்பான உங்களது சந்தேகங்களை உங்கள் பகுதி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் தொடர்பு கொண்டோ அல்லது பொது சுகாதாரப் பரிசோதகர், குடும்பநல உத்தியோகத்தர் மூலமாக தெளிவுபடுத்திக் கொள்ளமுடியும்.
- ★ HIV/AIDS தொடர்பான பரிசோதனைகள் மற்றும் வைத்திய ஆலோசனைகளை யாழ்.போதனா வைத்தியசாலையிலுள்ள அறை இலக்கம் 33இல் அமைந்துள்ள பாலியல் நோய்த்தடுப்பு சிகிச்சை நிலையத்தில் நம்பகத் தன்மையுடன் பெற்றுக்கொள்ளலாம்.
- ★ பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் HIV/AIDS நோயாளர்களுக்கான நிதியமும்,HIV/AIDS ஒருங்கிணைப்புக் குழுவும் உள்ளது. ஆர்வலர்கள் பணிமனையுடன் தொடர்பு கொண்டு தமது பங்களிப்பினை வழங்க முடியும்

சுகாதாரக் கல்விப் பிரிவு,
பி.சு.சே.பணிப்பாளர் பணிமனை,யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் முடிவுகளால் நைஜீரியாவில் பெரும் மோதல் நூற்றுக் கணக்கானோர் பலி; வீடு, கடைகள் தீக்கிரை

நைரோபி, டிச. 01

மத்திய நைஜீரியாவில் கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே தேர்தல் முடிவுகளால் மூண்ட கடும் மோதல்களில் நூற்றுக் கணக்கானோர் கொல்லப்பட்டனர். பெருந்தொகையானோர் காயமடைந்தனர். அநேக வீடுகளும் கடைகளும் தீக்கிரையாக்கப்பட்டன. இயல்பு நிலை சீர்குலைந்தது.

இந்த அசம்பாவிதங்களை அடுத்து, கலவரங்கள் மூண்ட ஜொஸ் நகரப் பிராந்தியத்தில் 24 மணித்தியாலய ஊரடங்கு அமுலாக்கப்பட்டது. வீதிகளில் இராணுவத்தினர் ரோந்துப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கலகம் விளைவிப்போர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யுமாறும் இராணுவத்துக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எதிரும் புதிருமான கோஷ்டிகள் சனிக்கிழமை நகரமெங்கும் கடைகள், வீடுகள், தேவாலயங்கள், மசூதிகள் ஆகியவற்றைத் தாக்குவதிலும் தீ மூட்டுவதிலும் ஈடுபட்டன. மேற்கு ஆபிரிக்க நாடான நைஜீரியாவில், 2004 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இடம்பெற்ற படுமோசமான கலவரங்கள் இவை என்று பாதுகாப்பு வட்டாரம் தெரிவித்துள்ளது.

இக்கலவரங்களால் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தங்கள் வீடுகளைவிட்டு வெளியேறியுள்ளார்கள். எங்கும் பதற்றம் நிலவுகிறது என நைஜீரிய செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது. இதுவரை முந்நூறுக்கும் மேற்பட்ட சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. கொல்லப்பட்டவர்களில் இரு சாராரும் அடங்குவர் என ஜொஸ் நகர முஸ்லிம் அமைப்பொன்று தெரிவித்துள்ளது.

ஜொஸ்ஸை தலைநகராகக் கொண்ட மத்திய நைஜீரிய மாநிலத் தேர்தல்களில் கிறிஸ்தவர்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட ஆளும் மக்கள் ஜனநாயகக் கட்சி வெற்றி ஈட்டி விட்டது என வியாழக்கிழமை அறிவிக்கப்பட்டது. இத்தேர்தல் முடிவுகளை, முஸ்லிம்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட அனைத்து நைஜீரிய மக்கள் கட்சி ஏற்க மறுத்து விட்டது. இது எதிர்க்கட்சியாகும்.

இது அப்பட்டமான தேர்தல் மோசடி. தேர்தல் முடிவுகளை ஏற்க மாட்டோம் என எதிரணியினர் வியாழக்கிழமை ஆர்ப்பரித்தனர். கோபாவேசமடைந்த எதிரணி இளைஞர்கள் வீதிகளில் டயர்களைப் போட்டு எரித்தனர். ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டனர். இவற்றால் இரு பிரிவினருக்கிடையிலான மோதல்கள் மூண்டு பெரும் கலவரங்களாக மாறின.

மறுதினமான வெள்ளிக்கிழமையும் நீடித்த கலவரங்கள் மூன்றாம் நாளான சனிக்கிழமை உச்சக் கட்டத்தை அடைந்தன. உள்ளூர் இமாம் ஷேக் காலித் அபுபக்கர் பி.பி.சி. செய்திச் சேவைக்கு இது குறித்துக் குறிப்பிடுகையில், ''சனிக்கிழமை மாத்திரம் முந்நூறுக்கும் மேற்பட்ட சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன'' என குறிப்பிட்டுள்ளார்.

கிறிஸ்தவ சமூகத்தவரின் சடலங்கள், நகர சேமக்காலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன. இரு தரப்புகளிலும் கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை அதிகரிக்கலாம்; முன்கூட்டியே திட்டவட்டமாக அறிவித்துவிட முடியாது என பொலிஸ் பேச்சாளர் பலா காசீம் தெரிவித்துள்ளார்.

ஊடரங்குச் சட்டம் அமுலிலிருந்த இரவு வேளையில், பொலிஸாரின் ரோந்து வாகனங்கள் கடந்த பின்னர் பலர் வீதிகளுக்கு வந்து கலவரங்களில் ஈடுபட்டுள்ளனர். இதையடுத்தே, கலகக்காரர்களைக் கண்ட கண்ட இடங்களில் சுட்டுத் தள்ளுமாறு இராணுவத்துக்குக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நைஜீரியாவின் வடக்கில் முஸ்லிம்களும் தெற்கில் கிறிஸ்தவர்களும் பெரும்பான்மையினராக வாழ்கிறார்கள். 2001 ஆம் ஆண்டு, இதே நகரப் பிராந்தியத்தில் இரு சாராருக்குமிடையே மூண்ட மதக் கலவரங்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

இப்பிராந்தியத்திலுள்ள பிறிதொரு நகரான யல்வாவில், 2004ஆம் ஆண்டில், இருநூறுக்கு மேற்பட்ட முஸ்லிம்கள் கிறிஸ்தவ தீவிரவாதிகளால் கொல்லப்பட்டார்கள். இரு சாராருக்குமிடையிலான மூர்க்கமான மோதலைத் தடுக்கும்பொருட்டு, அப்போதும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

# மும்பைத் தாக்குதலில் பாகிஸ்தானின் உளவு அமைப்புக்குத் தொடர்பா?

## இந்தியா துரித நடவடிக்கையில் குதிப்பு

புதுடில்லி, டிச. 01

பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐஎஸ்ஐக்கும் பல்வேறு தீவிரவாத அமைப்புகளுக்குமிடையே வலுவான உறவு உள்ளது என்ற உலக நாடுகளின் எச்சரிக்கையை பாகிஸ்தான் தொடர்ந்து உதாசீனப்படுத்தி வருகிறது என அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தியாவில் நடத்தப்பட்ட பல்வேறு பயங்கரவாதத் தாக்குதல்களின் பின்னணியில் ஐஎஸ்ஐ உள்ளது என இந்தியா பலமுறை பாகிஸ்தானிடம் சுட்டிக் காட்டியுள்ளது. அத்துடன் தனது குற்றச்சாட்டு தொடர்பான வலுவான ஆதாரங்களையும் அது பாகிஸ்தானிடம் அளித்துள்ளது.

தற்போது மும்பை நட்சத்திர ஹோட்டல்கள் மீதான பயங்கரவாதத் தாக்குதல்களுக்கும் ஐஎஸ்ஐக்கும் தொடர்பிருக்கலாம் என இந்தியா சந்தேகிக்கிறது. இதனை கருத்திற் கொண்டே பாகிஸ்தான் உளவு அமைப்பினரை இந்தியாவுக்கு வந்து விசாரணைக்கு ஒத்துழைக்குமாறு இந்தியா கேட்டுக்கொண்டது.

இந்தியாவின் கோரிக்கையை முதலில் ஏற்றுக்கொண்டு ஐஎஸ்ஐ தலைவரை அனுப்பி வைப்பதாகத் தெரிவித்த பாகிஸ்தான், பின்னர் பின்வாங்கிவிட்டது. ஐஎஸ்ஐ சார்பாக பிரதிநிதி ஒருவரை அனுப்பி வைப்பதாக அது தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானின் இந்த நடவடிக்கையால் அந்நாட்டின் மீதான சந்தேகம் மேலும் வலுத்துள்ளது என அரசியல் நோக்கர்களில் சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். இந்தியாவைப் போலவே அமெரிக்காவும் ஐஎஸ்ஐக்கும் தீவிரவாத அமைப்புகளுக்குமிடையே இணக்கமான உறவு உண்டு என குற்றஞ்சாட்டி வருகிறது.

கடந்த ஜூலை மாதம் பாகிஸ்தான் சென்ற அமெரிக்க புலனாய்வு அமைப்பின் துணை இயக்குநர் இதற்கான ஆதாரங்களையும் பாகிஸ்தான் உயர் அதிகாரிகளிடம் கையளித்துள்ளார். ஆப்கானிஸ்தானில் இடம்பெற்ற இந்தியத் தூதரகம் மீதான தாக்குதல் சம்பவத்திலும் ஐஎஸ்ஐ அமைப்பினரின் தொடர்பு உண்டு என சுட்டிக் காட்டியுள்ள அவர் அதற்கான ஆதாரங்களையும் பாகிஸ்தான் உயர் அதிகாரிகளிடம் அளித்துள்ளார்.

# மும்பைத் தாக்குதலுக்குத் திட்டம் வகுத்தோர் அல்-குவைதாவினரே!

## லண்டன் தீவிரவாத தடுப்பு நிபுணர் கருத்து

வாஷிங்டன், டிச. 01

மும்பையைத் தாக்கிய தீவிரவாதிகள் அல்-குவைதா முகாமில் பயிற்சி பெற்றவர்களாக இருக்கக்கூடும். இந்தத் தாக்குதல் திட்டம், அல்-குவைதாவால் உருவாக்கப்பட்டதாகவே தெரிகிறது என்று லண்டனைச் சேர்ந்த தீவிரவாத தடுப்பு நிபுணர் ஜோர்ஜ் காஸ்மிமேரிஸ் கூறியுள்ளார்.

அதிகபட்ச அழிவை ஏற்படுத்துவது அல்-குவைதா பாணி தாக்குதல் ஆகும். மும்பையிலும் அதேபோன்றே அதிகபட்ச அழிவை ஏற்படுத்தும் நோக்கத்தில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

அல்-குவைதா தாக்குதல் பாணியை உலகின் மற்ற தீவிரவாத அமைப்புகளும் பின்பற்றத் தொடங்கிவிட்டன. குறிப்பிட்ட இலக்கு இல்லாமல், கோரிக்கைகள் இல்லாமல், முன் திட்டமிடல் இல்லாமல் திடீரென தாக்கி, பொதுமக்களுக்கு அதிக அளவில் சேதம் ஏற்படுத்துவதே அல்-குவைதா பாணி தாக்குதல் ஆகும் என்றும் அவர் விவரித்துள்ளார்.

தாக்குதலை நேரில் பார்த்தவர்கள் கூறிய தகவல்களின்படி அமெரிக்கர்களையும், பிரிட்டிஷ்காரர்களையும் தீவிரவாதிகள் தேடியுள்ளார்கள். மும்பைத் தாக்குதலைப் பொறுத்தமட்டில் அல்-குவைதாவால் பயிற்சி அளிக்கப்பட்ட இஸ்லாமிய தீவிரவாத இயக்கங்களே நடத்தி இருக்கவேண்டும் என்று அமெரிக்க உளவு நிறுவனமான சிஐஏயின் முன்னாள் அதிகாரி புருஸ் ரியடெல் கூறியுள்ளார்.

## உலக அரங்கில்

# ரஷ்ய ஜனாதிபதி கியூபாவுக்கு விஜயம்

ஹவானா, டிச. 01

கியூபா விஜயத்தை மேற்கொண்டுள்ள ரஷ்ய ஜனாதிபதி திமித்ரி மெத்வதேவ், கியூபாவின் முன்னாள் ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோ உட்பட பல முக்கிய தலைவர்களைச் சந்தித்து பேசினார். பனிப்போர் காலத்தில் ரஷ்யாவும், கியூபாவும் ஓரணியில் செயல்பட்டன. எனினும் அதன் பின்னர் இரு நாடுகளுக்குமிடையிலான உறவில் தொய்வு ஏற்பட்டது.

திமித்ரி மெத்வதேவின் தற்போதைய பயணத்தின் மூலம் இரு நாடுகளுக்குமிடையிலான உறவு புத்துயிர் பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் நேற்று 3ஆம் கட்ட வாக்குப்பதிவு

ஜம்மு காஷ்மீர் மாநில சட்டப் பேரவைக்கு 3 ஆவது கட்டமாக 5 தொகுதிகளில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை வாக்குப் பதிவு தொடங்கி அமைதியாக நடைபெற்றது.

கடும் குளிர், பனிப் பொழிவு காரணமாக காலை வாக்குப் பதிவு மிகவும் மந்தமாக நடைபெற்றதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவித்தன. 3ஆவது கட்டமாக 5 தொகுதிகளில் நடைபெறும் இந்தத் தேர்தலில் 5 பெண்கள் உட்பட 71 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். இந்தத் தேர்தலில் மொத்தம் 3 இலட்சத்து 40 ஆயிரம் வாக்காளர்கள் தங்கள் வாக்குகளை பதிவு செய்கின்றனர்.

வாக்குப் பதிவு நடைபெற்ற அனைத்து 448 வாக்குச் சாவடிகளும் மிகவும் பதற்றம் நிறைந்தவைகளாக அறிவிக்கப்பட்டு பாதுகாப்புப் பணியில் மேலதிக இராணுவப் படைகள் ஈடுபடுத்தப்பட்டன. ஜம்மு காஷ்மீர் மாநில சட்டப் பேரவைக்கு 7 கட்டங்களாக அடுத்த மாதம் 24ஆம் திகதி வரை தேர்தல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தீவிரவாதத்தால் இந்தியாவின் ஜனநாயகத்தை அழிக்கமுடியாது

## ஒபாமா நம்பிக்கை தெரிவிப்பு

தீவிரவாத செயல்களால் இந்திய ஜனநாயகத்தை வீழ்த்த முடியாது என அமெரிக்காவின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

மும்பைத் தாக்குதல் தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங்குடன் சனிக்கிழமை காலை ஒபாமா தொடர்பு கொண்டார். அப்போது சண்டையின்போது இறந்த பொதுமக்களுக்காகத் தமது ஆழ்ந்த இரங்கலை அவர் தெரிவித்துக் கொண்டார்.

மும்பையில் நடந்த சம்பவம் குறித்து ஒபாமாவிடம் மன்மோகன் சிங் விளக்கினார். இது குறித்து ஒபாமா அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

தீவிரவாதத்தால் இந்திய ஜனநாயகத்தை வீழ்த்த முடியாது. தீவிரவாதிகளை முறியடிக்க உலக சமுதாயம் கொண்டுள்ள உறுதியையும் குலைக்க முடியாது. இந்த இக்கட்டான தருணத்தில் அமெரிக்கா உட்பட அனைத்து நாடுகளும் இந்தியாவுக்குத் துணைபுரிய வேண்டும் என அதில் அவர் கேட்டுள்ளார்.

# ஆப்கானிஸ்தானில் கூட்டுப்படை நடவடிக்கை தலிபான் கொமாண்டர் உட்பட 52பேர் பலி!

ஆப்கானிஸ்தானின் கஜினி, ஹெல்மண்ட் மாகாணங்களில் அமெரிக்க - ஆப்கன் கூட்டுப் படை வெள்ளிக்கிழமை நடத்திய அதிரடித் தாக்குதலில் முக்கிய தலிபான் கொமாண்டர் உட்பட 52 தீவிரவாதிகள் உயிரிழந்தனர்.

தேடப்பட்டு வந்த முக்கிய தலிபான் கொமாண்டர் ஹஜி யாகுப், கஜினி மாகாணத்தில் உள்ள ஒரு வீட்டில் பதுங்கியிருக்கிறார் என அமெரிக்க இராணுவ[illegible]

இதையடுத்து [illegible] படை விரைந்து சென்றது. அந்த வீட்டில் இருந்தவர்களை வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டது. அப்போது 6 பெண்களும், 12 குழந்தைகளும், வெளியேறினர். அப்போது ஒருவர் பெண் போல் ஆடை அணிந்து கொண்டு பாய்ந்து தாக்குதல் நடத்த முயற்சித்தார்.

உடனே அவர் மீது இராணுவ வீரர்கள் பதில் தாக்குதல் நடத்தினர். இதில் அந்த நபர் அந்த இடத்திலேயே பலியானார். அவரை சோதித்துப் பார்த்ததில் அவர் தேடப்பட்டு வந்த த[illegible]ண்டர் ஹஜி யாகுப் என்பது தெரியவந்தது. கஜினி மாகாணத்தில் நடந்த சண்டையில் மேலும் 18 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.



மும்பையில் பயங்கரவாதிகளின் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்காக அமெரிக்காவின் நியூயோர்க் மாநகரில் வியாழக்கிழமை நடைபெற்ற பிரார்த்தனைக் கூட்டத்தில் பங்கேற்ற (இடமிருந்து) அந்த மாநகர சபைத் தலைவர் கிஸ்டினே குயின், மேயர் மைக்கேல் புளூம்பெர்க், இந்துக் கோயில்கள் சங்கத் தலைவர் உமா மிசோர்கர்.

# மும்பையில் உயிரிழந்தோருக்கு அமெரிக்காவில் பிரார்த்தனை

நியூயோர்க், டிச. 01

மும்பையில் பயங்கரவாதிகளின் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்காக அமெரிக்கா முழுவதுமுள்ள இந்துக் கோயில்களில் வியாழக்கிழமை பிரார்த்தனை நடைபெற்றது.

நியூயோர்க் மாநகரின் புறநகர்ப் பகுதியில் இந்துக் கோயில்கள் சங்கத்தின் சார்பில் ஒருங்கிணைக்கப்பட்ட பிரார்த்தனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் நூற்றுக்கணக்கான மக்கள் திரளாகக் கலந்துகொண்டனர். நியூயோர்க் மாநகரின் முக்கிய தலைவர்களும் பங்குபற்றி உயிரிழந்தவர்களுக்காகப் பிரார்த்தனை செய்தனர்.

பிரார்த்தனைக் கூட்டத்தில் நியூயோர்க் மாநகர மேயர் மைக்கேல் புளூம்பெர்க் உரையாற்றுகையில், பயங்கரவாதிகளின் தீண்டல் எவ்விதம் கொடியது என்பதை மும்பை மக்களைப் போலவே நியூயோர்க் மக்களும் நன்கு அறிந்துள்ளனர் என்றார்.

# இந்தியாவுக்கு உதவ கோருகின்றது ஐ.நா.

நியூயோர்க், டிச. 01

தீவிரவாதத்தை எதிர்க்க ஐ.நா. அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகள் தங்களது ஒத்துழைப்பை இந்தியாவுக்கு அளிக்கவேண்டும் என ஐ.நா. பாதுகாப்புச் சபை கேட்டுள்ளது.

மும்பை நட்சத்திர ஹோட்டல்களில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து, 15 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐ.நா. பாதுகாப்புச் சபைக் கூட்டம் நடைபெற்றது.

இதனிடையே, மும்பையில் நடந்த தாக்குதலுக்கு கனடா தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளப்பெருக்கு, 'நிஷா' சூறாவளியால் யாழ்.மாவட்டத்தில் தொற்றுநோய் அபாயம்

## எச்சரிக்கிறார் சுகாதாரப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், டிசெ.1

யாழ்.மாவட்டத்தில் கடந்த வாரம் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு அனர்த்தத்தால் பெரும்பாலான நீர்நிலைகள் மாசடைந்துள்ளன. இதனால் தொற்றுநோய்கள் தண்ணீர் மூலம் பரவும் அபாயம் உள்ளது.

எனவே பொதுமக்களை எச்சரிக்கையுடன் செயற்படுமாறு கோருகின்றார் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்.

இது தொடர்பாக அவர் அறிவுறுத்தியுள்ளவை வருமாறு:

யாழ்.மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் பின்னர் பெரும்பாலான நீர்நிலைகள் மாசடைந்துள்ளன. இதனால் நீர்மூலம் பரவும் நோய்கள் தீவிரமாகப் பரவ வாய்ப்புள்ளது. எனவே பொதுமக்கள் இதனைத் தடுக்க பின்வரும் ஏதாவது ஒரு முறையில் சுத்திகரிக்கப்பட்ட நீரையே பருக வேண்டும்.

* கொதித்து ஆறிய நீர்
* சூரிய ஒளி மூலம் (சோடிஸ் முறை) சுத்திகரிக்கப்பட்ட நீர்
* நீரை சுத்தமாக்கும் வில்லைகளால் சுத்தமாக்கபபட்ட நீர்

பொதுமக்கள் தமக்கு வேண்டிய நீரை சுத்தமாக்கும் வில்லைகளை தமது பகுதி பொதுச்சுகாதார பரிசோதகர் அல்லது குடும்ப நல உத்தியோகத்தரிடம் பெற்றுக்கொள்ளலாம். பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள் தத்தமது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் பெற்றுக்கொள்ளவும்.

குடிப்பதற்கு அல்லது சமைப்பதற்குத் தேவையான நீரை ஓர் கொள்கலனில் இட்டு வேண்டிய அளவு வில்லைகளை இட்டு 30 நிமிடங்கள்வரை விடவேண்டும். அதன்பின்னர் இந்நீரை குடிக்க அல்லது சமைக்கப் பாவிக்கலாம்.

வெள்ளம் வற்றிய இடங்களில் உள்ள கிணறுகள் இறைத்து துப்பரவு செய்யப்பட்டு குளோரின் இடப்படவேண்டும். ஏனைய கிணறுகள் வெள்ளம் வற்றியபின் துப்பரவு செய்யப்படவேண்டும்.

இவை பற்றிய மேலதிக ஆலோசனைகளை உங்கள் பகுதி பொதுச்சுகாதாரப் பரிசோதகரிடம் அல்லது குடும்பநல உத்தியோகத்தரிடம் பெற்றுக்கொள்ளலாம் - என்றார். (202)

## வேலணை சிற்பனை வீதி விஷமிகளால் சேதம்

நல்லூர், டிசெ.1

வேலணை மத்திய கல்லூரிக்குச் செல்லும் சிற்பனை வீதியில் விஷமிகள் அநாவசியமாக பல்வேறு பகுதிகளிலும் குறுக்காக வெட்டியுள்ளனர். இதனால் கல்லூரி மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பல்வேறு சிரமங்களின் மத்தியில் செப்பனிடப்பட்ட இந்த வீதியில், சமீபத்தில் உள்ள ஒரு சிலர் தமது காணிகளில் தேங்கியுள்ள வெள்ளத்தை அகற்றுவதற்காக தேவையற்ற வகையில் வீதியை வெட்டிச் சீர்குலைத்துள்ளனர் என முறையிடப்படுகி[illegible]

வீதியின் குறுக்காக வெட்[illegible]ளதால் போக்குவரத்தில் தாங்கள் சிரமபபடுவதாக மாணவர்கள் தெரிவிக்கின்றனர். (202-111)

## பண்ணைப்பாலப் படகுச் சேவை: கட்டணம் அறவிட ஏற்பாடு

நல்லூர், டிசெ.1

பண்ணைப் பாலத்தில் தற்போது நடைபெறும் பயணிகள் படகுச் சேவைக்கு கட்டணம் அறவிடப்படவுள்ளது.

பண்ணைப் பாலம் கன மழை மற்றும் புயல்காற்றால் பெரும் சேதமடைந்தது. இதையடுத்து தீவகப் பகுதிக்கான போக்குவரத்துக்குப் படகுச் சேவை இடம்பெற்று வருகின்றது.

குறிப்பிட்ட சேவை இலவசமாகவே இதுவரை நாளும் இடம்பெறுகின்றது. எனினும் படகுக்கான கூலியை வழங்க முடியாத நிலையில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை உள்ளதென சபையின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதையடுத்து பயணிகளிடமிருந்து படகுக்கான கட்டணம் அறவிடப்படலாம் எனவும் எனினும் ஒரு பயணிக்கான கட்டணம் எவ்வளவு அறவிடப்படும் என்பது இதுவரை முடிவாகவில்லை என்றும் அறியப்படுகின்றது. (202-111)

## வெள்ளத்தால் பாதீனியம் பரவும் அபாயம்

இணுவில், டிசெ.1

அண்மையில் பெய்த பெருமழையைத் தொடர்ந்து பாதீனியச் செடி குடாநாட்டின் பல பாகங்களுக்கும் பரவக்கூடுமென அஞ்சப்படுகின்றது.

இணுவில், மருதனார்மடம், சுன்னாகம், ஊரெழு, உரும்பிராய் போன்ற பகுதிகளில் மழை பெய்வதற்கு சில நாள்களுக்கு முன்னர் பல விவசாய நிலங்களில் பூத்துக் குலுங்கியபடி பாதீனியச் செடிகள் காணப்பட்டன.

தற்போது அவற்றின் விதைகள் வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்டு, பல பாகங்களுக்கும் பரவியுள்ளன.

இதனால் பல விவசாய நிலங்கள் மனித பாவனைக்கு ஒவ்வாத பாதீனியச் செடியின் தாக்கத்திற்கு உள்ளாக நேரிடும் அபாய நிலை தோன்றியுள்ளது.

பாதீனியச் செடியின் பரம்பலைத் தடுக்க விவசாய சம்மேளனங்கள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். (4-45)

## கால்நடை நோய்த் தடை மருந்துகள் மின்சாரம் இன்றிப் பழுதடைந்துள்ளன

அச்சுவேலி, டிசெ.1

குடாநாட்டில் மின்சாரம் இல்லாமையால் குளிர் சாதனப் பெட்டிகளில் பாதுகாப்பான முறையில் வைத்திருந்து பயன்படுத்தும் கால் நடை நோய்த்தடை மருந்துகள் பழுதடைந்துள்ளன.

இந்த மருந்து வகைகளைப் பயன்படுத்துவதால் நோய்த்தடை தொடர்பான செயற்பாடுகளும் இல்லை. எதிர்பாராத பக்க விளைவுகளும் ஏற்படும் என கால்நடை வளர்ப்போர் கவலை தெரிவிக்கின்றனர்,

கோழிகளுக்கான நோய்களான ரனிக்கட், ஹம்போறா, அம்மைநோய் என்பவற்றின் தடை மருந்துகள், நாய்களுக்கு நோய்த்தடை மருந்து வகை, ஏற்புநோய் தடை மருந்து, விலங்கு விசர்நோய் தடை மருந்து உள்ளிட்ட மருந்து வகைகள் குளிர்சாதனப் பெட்டிகளில் வைத்து பயன்படுத்தப்படும் வகையைச் சேர்ந்தவை. இவை 24 மணிநேரமும் குளிர்சாதனப் பெட்டியில் வைத்திருந்து, பயன்படுத்து வேளையில் வெளியே எடுத்து பயன்படுத்தப்படுபவை.

இத்தகைய மருந்துகள், குளிர்சாதனப் பெட்டிகள் ஒருசில மணிநேரம் செயற்படாவிடினும் - மிகவும் குறைந்த வெப்பநிலையில் அவற்றிலுள்ள நோய்த்தடைகளை நுண்ணுயிர்கள் (வலுக்குறைக்கப்பட்ட நுண்ணுயிர்கள்) அழிந்துவிடும்.

இந்த மருந்துவகைகள் 70 மணித்தியாலங்களுக்கு மேல் மின்சாரம் இல்லாத நிலையில் இருந்துள்ளன. வெள்ளப்பெருக்கால் எல்லோரும் குழம்பியிருந்த வேளையில் அவை எவ்வாறு உரிய நிலையில் இருந்திருக்கும் என்ற சந்தேகம் கால்நடை வளர்ப்போர், பண்ணையாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக கால்நடை வைத்திய நிபுணர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில்:

''கால்நடைகளுக்கான நோய் தடை மருந்து வகைகள் பெருமளவில் தனியார் துறையினரால் கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்டு யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்யப்படுகின்றன. 70 மணி நேரத்துக்கு மேல் குளிர்சாதனப் பெட்டிகள் செயற்படாமையால் தடை மருந்துகள் பழுதடைந்திருக்கும். இந்த மருந்துகளை பயன்படுத்துவதன் மூலம் எந்தவிதமான நன்மையும் இல்லை; தீமையே - எனத் தெரிவித்தார். (202-11)

# குடாக்கடலில் பட்டிவலை, களங்கட்டி வலை தொழில்செய்ய கடற்றொழிலாளருக்கு அனுமதி

## உபகரணங்கள் இன்றி மீனவர் திண்டாட்டம்

குருநகர், டிசெ.1

குடாக்கடற் பகுதியில் மீண்டும் பட்டி வலை மற்றும் களங்கட்டி வலைத் தொழிலைச் செய்ய படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

எனினும் இத்தொழிலில் சுமார் 200 தொழிலாளர்களே ஈடுபடக்கூடியதாக தொழில் உபகரணங்கள் உள்ளதாக குருநகர் மீனவர்கள் தெரிவித்தனர்.

இத்தொழிலுக்குத் தேவையான கம்புகளை பெற்றுக்கொள்வது மிகவும் கஷ்டமாக உள்ளதுடன் பழுதடைந்த கம்புகளைக் கொண்டே தற்போது மீனவர்கள் தொழிலில் ஈடுபட்டு வருவதாக குருநகர் சிறகுவலைத் தொழிலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

படையினரால் விதிக்கப்பட்ட மீன்பிடித் தடைகளில் சில நீக்கப்பட்டுள்ள போதிலும் இரவுநேர மீன்பிடி மற்றும் வெளியிணைப்பு இயந்திரங்கள் பாவித்து மீன்பிடித்தல் போன்றவற்றுக்கான அனுமதி வழங்கப்படவில்லை.

வெளியிணைப்பு இயந்திரங்களைப் பயன்படுத்தி தொழில் செய்வதற்கு இவ்வாரம் அனுமதி வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

இதேநேரத்தில் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள குருநகர் இறங்குதுறைக்கும் பண்ணைப்பாலத்துக்குமிடைப்பட்ட பகுதி இழுவைறால் தொழிலுக்கும் பட்டி வலைத் தொழிலுக்கும் வாய்ப்பான கடற்பகுதியாக உள்ளதால் இந்தக் கடற் பகுதியிலும் இர்வு, பகல் வேளைகளில் மீன்பிடிக்க அனுமதி வழங்க் உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மீனவர் கோரிக்கை விடுத்துள்ளனர். (203-224-51)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## எதுவித நிவாரண உதவியுமின்றி பாதிக்கப்பட்ட சிலர் அல்லல்

நாவற்குழி, டிசெ.1

அண்மையில் பெய்த கடும் மழையினாலும், புயல்காற்றினாலும் பாதிக்கப்பட்டு வீடுகளில் இருந்து வெளி யேறிய தமக்கு இதுவரை எதுவித நிவார ணமும் வழங்கப்படவில்லை என கைதடி சித்தி விநாயகர் முன்பள்ளியில் கடந்த 6 நாள்களாக தங்கியுள்ள குடும்பஸ்தர் ஒருவர் கவலையுடன் தெரிவித்தது.

கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு வீடுகளில் இருந்து சகல உடைமைகளையும் கைவிட்டு இந்த முன்பள்ளியிலே மாற்றுவதற்கு உடை எதுவுமின்றியும் உண்ணவுமின்றியும் தங்கியுள்ளோம்.

இது சம்பந்தமாக உரியவர்களுக்கு முறையிட்ட போதும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றவாறு இரு கால்களும் செயலிழந்த நிலையில் இருக்கும் கைதடி தென்கிழக்கு முகவரியைச் சேர்ந்த குடும்பஸ்தரான நாகன் சபாரத்தினம் (வயது 50) கவலை தெரிவித்துள்ளார்.

தன்து வீட்டுக்குள்ளும் வெள்ளம் புகுந்த நிலையில் இருப்பதனாலேயே தாம் வெளியேறியதாகவும் அவர் தெரிவித்தார். (202-288)





குடாநாட்டைத் தாக்கிய 'நிஷா' தென்மராட்சியில் ஏற்படுத்திய பதிவுகளையே படங்களில் காண்கிறாகள். வீடு ஒன்றினுள்ளே புகுந்து கொண்ட வெள்ளத்தை முதலாவது படத்தில் காணலாம். மீசாலைப் பகுதியில் வீட்டின் கூரையைப் பதம்பார்த்த பனைமரத்திடம் இருந்து தப்பி[illegible] படம் காட்டுகிறது. பெருங்குளம் நெல்வயல் பகுதியில் நிறைந்துள்ள வெள்ளத்தில் மீன் பிடிக்கப்படுவதை மூன்றாவது படத்தில் காணலாம். (படங்கள்:அருணன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நேர்முகப் பரீட்சை

நல்லூர்,டிச.01

பலாலி மற்றும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளுக்கு ஆசிரிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 3 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

## மாணவர் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், டிச.01

யாழ்.பல்கலைக் கழக கல்வியற்றுறையில் எம்.ஈ.டி/ 2007/08 பிரிவில் கற்கும் மாணவர்கள் எதிர்வரும் சனிக்கிழமை பல்கலைக்கழக கல்வியற்றுறை விரிவுரை மண்டபத்தில் ஒன்று கூடுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(202)


### பாராட்டி வாழ்த்துகின்றோம்

கொழும்பு BMICH இல் 18.11.2008 அன்று NIE இன் பட்டமளிப்பு விழாவில் B.Ed. பட்டம் பெற்ற எமது வித்தியாலய ஆசிரியை செல்வி கமலேஸ்வரி வாரித்தம்பி அவர்கள் மேலும் பல பட்டங்கள் பெற்றுப் பல்லாண்டு வாழ்ந்திட எமது உளங்கனிந்த நல்வாழ்த்துகள்.



பாடசாலைச் சமூகம்.
யா/கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்.
(80367)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

வடமராட்சி சயன்ஸ் சென்ரர் முதல்வர் அமரர் குமாரசாமி இராஜரத்தினம் நினைவாக நடத்தப்படும் க.பொ.த(உயர்தர) தமிழ்ப்பாட தொடர் பரீட்சையில் முதற்பத்து இடங்களைப் பெற்ற மாணவர்கள்.

01. செல்வி P.பாரதி - யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
02. செல்வி P.விஜிதா -யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை.
03. செல்வி S.பிரசாந்தினி -யா/வட இந்து மகளிர் கல்லூரி.
04. செல்வி A.நிஜிதா- யா/வட இந்து மகளிர் கல்லூரி.
05. செல்வி S.பத்மலோஜினி -யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
06. செல்வி G.சரிதா-யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை.
07. செல்வி P.ரசானி- யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.
08. செல்வி M.தர்சிகா -யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.
09. செல்வி இ.ஜெசிகா - யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை.
10. செல்வி S.தனுஷியா -யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை.

குறிப்பு:- வெளி மாணவர்களும் இத் தொடர் பரீட்சையில் கல்வி நிலைய விதிமுறைகளுக்கமைய தோற்றலாம்.

**BEACON CENTER MODERN EDUCATON CENTER VADAMARADCHY.**

### சேவை நலன் பாராட்டு

**திரு. சின்னத்துரை சிவகுமாரன்**



தனது 36 ஆண்டு சேவைக் காலத்தில் 7 ஆண்டுகள் எமது பாடசாலையில் சேவையாற்றி 01.12.2008 இல் ஓய்வுபெறும் அதிபருக்கு எமது சேவைநலன் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கல்வி கற்ற பாடசாலை:-**

ஆரம்பக்கல்வி:- யா/குப்பிளான் விக்னேஸ்வரா ம.வி.
இடைநிலை-யா/மத்திய கல்லூரி.
உயர்நிலை-அலெக்சான்றா கல்லூரி, கொழும்பு-07

**சேவை விபரம்: ஆசிரியராக**

1. நு/ஹைலன்ஸ் ம.வி.,ஹட்டன் - 17.07.1972 - 30.07.1974
2. யா/மயிலிட்டி வடக்கு கலைமகள் பாடசாலை - 01.08.1974 - 31.01.1977
3. யா/குப்பிளான் விக்னேஸ்வரா ம.வி - 01.02.1977 - 08.01.1977
4. பலாலி ஆசிரியர் கலாசாலை - 09.01.1978 - 31.12.1979
5. மட்/மெதடிஸ்த மத்திய கல்லூரி - 01.01.1980 - 14.06.1981
6. வவு/பண்டாரிக்குளம் அ.த.க.பா. - 15.06.1981 - 30.06.1981
7. வவு/கனகராயன் குளம் ம.வி - 01.07.1981 - 08.01.1982
8. வவு/புளியங்குளம் அ.த.க.பா. - 09.01.1982 - 30.05.1985
9. வவு/மாறா இலுப்பை அ.த.க.பா. - 01.06.1985 - 26.02.1986
10. வவு/நொச்சிமோட்டை அ.த.க.பா. - 27.02.1986 - 30.04.1986
11. யா/குப்பிளான் விக்கேஸ்வரா ம.வி - 01.05.1986 - 08.12.1991

**அதிபராக:**

1. யா/புத்தூர் மெதடிஸ்த மிஷன் - 09.12.1991 - 25.02.1992
2. யா/புன்னாலைக்கட்டுவன் அ.த.க.பா. - 26.02.1992 - 14.08.2001
3. யா/குப்பிளான் விக்னேஸ்வரா ம.வி - 15.08.2001 - 30.11.2008

யா/குப்பிளான் விக்னேஸ்வரா ம.வி.
**பாடசாலைச் சமூகம்.**

## தேசிய சேமிப்பு வங்கியின்
## யாழ்ப்பாண
### அஞ்சல் வங்கிக் கிளை

வாடிக்கையாளர்களுக்கு கூடுதலான வசதிகளுடன்...




நம்பகமான அரச வங்கியின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி எமது யாழ்ப்பாண சகோதர மக்களுக்காக பாதுகாப்பானதும் செயற்திறனுடனுமான சேவையை வழங்கும் நோக்கில் நட்புறவுடன் தேசிய சேமிப்பு வங்கியின் புதிய அஞ்சல் வங்கிக் கிளையொன்று யாழ் நகரில் 2008 டிசம்பர் மாதம் 01ம் திகதி (இன்று) இல. 112, லக்ஷான் பிளாஸா கட்டிடத் தொகுதி, நாவலர் வீதி எனும் இடத்தில் திறந்து வைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.

அவ்வாறே எமது வெள்ளத்தை வாடிக்கையாளர்களுக்கு மிகவும் நெருங்கிய சேவையை வழங்கும் நோக்கில் தேசிய சேமிப்பு வங்கியின் வெள்ளவத்தை கிளை இல. 350, காலி வீதி, கொழும்பு 04 எனும் இடத்தில் டிசம்பர் 1ம் திகதி புதிதாக திறந்து வைக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் அறியத் தருகிறோம்.

www.nsb.lk தேசிய சேமிப்பு வங்கி NSB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு செஞ்சிலுவை உதவி

யாழ்ப்பாணம்,டிசெ.1

வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிதண்ணீர், சுகாதார வசதிகளை மேற்கொள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தப் பணிகளை முன்னெடுக்க வசதியாகப் பாதிக்கப்பட்டவர்களின் விவ ரங்கள் கிளைத் தலைவர்கள் ஊடாகச் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

இடம்பெயர்ந்த மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் குடிதண்ணீர், சுகாதார வசதிகளை சீராக்க செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் இணைந்து செஞ்சிலுவைச் சங்கம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பணிகளை இரவு - பகலாக மேற்கொள்வதாகவும் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

(1)

# யாழ்.ப.நோ.கூ.சங்கப் பணியாளருக்கு வெள்ள நிவாரணமாக தலா 5 ஆயிரம் ரூபா

யாழ்ப்பாணம், டிசெ.1

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வெள்ள அனர்த்த நிவாரணக் கொடுப்பனவாக 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டதாக சங்கத் தலைவர் ப.கிரிதரன் தெரிவித்தார்.

இந்த நிவாரண நிதி சங்கத்தின் தற்காலிகப் பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டது.

அத்துடன் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சகல பணியாளர்களுக்கும் நியாயவிலையில் சீனி, அரிசி, மா, பருப்பு போன்ற அத்தியாவசியப் பொருள்களும் விநியோகிக்கப்பட்டன.

சங்கத்தின் இந்த செயற்பாட்டுக்குப் பணியாளர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

(203-224)

# தருமபுரம் விமானக் குண்டு வீச்சில் காயமுற்ற எழுவரின் நிலைமை கவலைக்கிடம்

வவுனியா, டிசெ.1

கிளிநொச்சி, தருமபுரம் பகுதியில் ஸ்ரீலங்கா விமானப்படையினர் சனிக்கிழமை நடத்திய தாக்குதலில் காயமடைந்த 7 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தர்மபுரம் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் பிறைற்றன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பி.பி.ஸி தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே டாக்டர் மேற்படி தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

சனிக்கிழமை அதிகாலை இரண்டு மணியளவில் பாரிய வெடிச்சத்தங்களும் விமானங்களின் இரைச்சலும் கேட்டன. சுமார் ஒரு மணி நேரம் கழித்து விமானத் தாக்குதலில் காயமடைந்தவர்கள் எனத் தெரிவித்து 19 பேர் எமது வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டனர். அவர்களில் 6 பேர் பத்து வயதுக்குட்பட்ட சிறுவர்கள் ஆவர். அத்துடன் 6 வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவரின் சடலமும் 80 வயது மதிக்கத்தக்க முதியவர் ஒருவரின் சடலமும் ஒப்படைக்கப்பட்டன.

''இப்பொதுமக்கள் கிளிநொச்சியின் கல்லாறு பிரதேசத்திலுள்ள சுண்டிக்குளம் என்ற பகுதியிலுள்ள மீள்குடியேற்றக் கிராமத்தில் வசிப்பவர்கள் என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்'' - இப்படி டாக்டர் கூறினார்.

(அ-2)

# தென்மராட்சியில் ப.நோ.கூ.சங்கங்களின் 14 கிளை நிலையங்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.1

பெருமழையுடன் கூடிய புயலினாலும் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் தென்மராட்சியில் உள்ள கொடிகாமம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், கைதடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் என்பவற்றின் 14 கிளை நிலையங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

மந்துவில் மேற்கு கிளை, இராமாவில், வரணி இயற்றாலை, தாவளை இயற்றாலை, நாவற்காடு, மிருசுவில் வடக்கு, கைதடி வடக்கு, கைதடி கிழக்கு, கொடிகாமம் எரிபொருள் நிரப்பு நிலையம், கொடிகாமம் கிளை இல.1, கச்சாய் பலாலி கிளை 02, கூட்டுறவு நகர் கடை (கொடிகாமம் சந்தி), இயற்றாலை, உசன் ஆகிய கிளை நிலையங்கள் திறக்க முடியாத அளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளன எனத் தென்மராட்சிப் பிரதேச செயலக வட்டாரம் தெரிவித்தது.

(202-131)

# ஒதியமலை மீட்கப்பட்டதாகப் படைத்தரப்பு அறிவிப்பு

கொழும்பு, டிசெ.1

முல்லைத்தீவில் ஒதியமலை கிராமத்தை சனிக்கிழமை பிற்பகல் படையினர் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

நெடுங்கேணிக்கு கிழக்கே ஐந்து மைல் தூரத்தில் அமைந்துள்ள இந்தக் கிராமம் கடும் சண்டையின் பின்னர் மீட்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

இந்தச் சண்டையில் விடுதலைப் புலிகளின் நான்கு உறுப்பினர்களின் சடலங்களையும் ஆயுத்தளபாடங்களையும் படையினர் கைப்பற்றியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(அ-1)

# வினா- விடைப் போட்டி முடிவு திகதி நீடிப்பு


யாழ்ப்பாணம், டிசெ.1

சர்வதேச 'எயிட்ஸ்' தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் நடத்தும் வினாவிடைப் போட்டிக்கான முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளது.


குடாநாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலையைக் கருத்தில் கொண்டு எதிர்வரும் 5 ஆம் திகதி வரை பூரணப்படுத்தப்பட்ட வினாக் கொத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்று சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் அறிவித்துள்ளது.

பாலியல் நோய்கள் தொடர்பான விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் பொருட்டு திறந்த முறையில் இந்தப் போட்டி நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ-2)



கிளிநொச்சி தருமபுரத்தில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த முகாம் மீது சனிக்கிழமை அதிகாலை விமானப்படை விமானங்கள் நடத்திய குண்டுத்தாக்குதலில் பலியான சிறுவர்களையும், காயமடைந்தவர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதையும் படங்களில் காணலாம்.



வன்னியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள் வெவ்வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து செல்லும் காட்சிகள் ....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Quantity Surveying & Building Economics

edexcel INTERNATIONAL

# Higher National Diploma in Quantity Surveying

**Build Your Future in the Fastest Growing Industry**

Approved by Institute of Quantity Surveyors in Sri Lanka

Applications for the January 2009 intake are now open

**More Information: 021 222 8060**

## ஓர் அற்புதமான எதிர்காலத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

Edexcel நிறுவனத்தின் தரப்படுத்தலில் 'A' தரத்தினைப்பெற்று HND கற்கை நெறிக்கு தனித்துவம் மிக்க எமது நிறுவனத்தில் HND QS கற்கின்ற இவ்வரிய வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ளுங்கள். இரண்டு வருடகால இக்கற்கை நெறியினை பூர்த்தி செய்த மாணவர்கள் பட்டப்படிப்பினை பிரித்தானிய முன்னணி ஆறு நட்சத்திரப் பல்கலைக்கழகமான Salford பல்கலைக்கழகத்தில் தொடரலாம். Edexcel நிறுவனத்தின் இக்கற்கை நெறியானது ICBT Campus உடன் இணைந்து எம்மால் நடாத்தப்படுகின்றது.

சர்வதேச தரம் வாய்ந்த இக்கற்கைநெறிகளினை தென்பகுதி சென்று, குறிப்பாக கொழும்பில் கற்கவேண்டிய நிலையை முற்றாக மாற்றி, பெற்றோரின் அரவணைப்பிலும் பாதுகாப்பிலும் இருந்து கொண்டே தமது சொந்த பிரதேசத்தில் குறைந்த செலவுடன் மேற்கொள்ளகூடிய வாய்ப்பினை IIS City Campus நிறுவனம் ஏற்படுத்தித்தந்துள்ளது.

### Progressions

HND in Quantity Surveying is a premium qualification to establish a career in Quantity Surveying/Cost management/Project management.

Provides the direct entry into BSc (Hons.) in Quantity Surveying Degree from the University of Salford, UK. University of Salford is the highest rated, 6* premier institute and a partner institution with the RICS (Royal Institution of Chartered Surveyors - UK)

### Unique Features of this Course

- State-of-the-art learning facilities
- Well qualified lecture panel
- Well structured course content
- Modular Based Learning System
- Industrial training from the best Construction Companies in Sri Lanka
- Industry focused training method



Our Business Partner

ICBT CAMPUS

**IIS CITY CAMPUS**
#200, Sivan Pannai Road, Jaffna.
Tel:021 222 8060 Fax:021 222 6933
Email:iisco@sltnet.lk
Web: iiscitycampus.com

---

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்
## உத்தியோகபூர்வ முடிவுகள்

1041 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

துலாம் **04 05 27 53**

**28-11-2008**

செல்லுபடியாகும் தொடர் இல. 500249656 - 500269620

ஜக்பொட் பரிசு ரூபா. 8,778,130/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 216,120 | 20/- | 4,322,400/- |
| 2 இலக்கங்கள் | 19,923 | 40/- | 796,920/- |
| 1 இல. + லக்கினம் | 19,670 | 60/- | 1,180,200/- |
| 2 இல. + லக்கினம் | 1,749 | 200/- | 349,800/- |
| 3 இலக்கங்கள் | 535 | 1000/- | 535,000/- |
| 3 இல. + லக்கினம் | 44 | 10,000/- | 440,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 8,778,130/- | - |
| மொத்தம் | | | 8,224,320/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 258,049 | | 8,724,320/- |

**இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 9,260,880/-**

தொடர் இலக்கம் 400247969 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2008 டிசெம்பர் 02 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| மட்டக்களப்பு | 500254629-2-48 |
| அநுராதபுரம் | 500267372-3-23 |
| பதுளை | 500258715-2-01 |
| மொனராகலை | 500261832-7-13 |
| கம்பஹா | 500268345-5-36 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

---

# தேசியசேமிப்பு வங்கி - அஞ்சல் வங்கிக் கிளை (வடமாகாணம்)

# அங்குரார்ப்பணம்

## National Savings Bank- Inauguration of Postal Banking Branch (North)

இதுவரை அநுராதபுரத்தில் இயங்கிய வங்கிக் கிளை இன்று முதல் யாழ்ப்பாணத்தில் ....

யாழ்.மக்கள் நலன்கருதி இன்று (01.12.2008) காலை 9.30 மணிக்கு கோலாகலமாக திறந்து வைக்கப்படவுள்ளது.

வடமாகாணத்தின் யாழ்.கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட அஞ்சல் வங்கிகளின் நடவடிக்கைப் பிராந்திய தலைமையகமாக இக்கிளை இயங்கும் அத்தோடு தேசிய சேமிப்பு வங்கிக்கிளையின் சகல நடவடிக்கைகளும் இங்கு இடம்பெறும் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

**இடம்:**
112, நாவலர் வீதி, 'லக்சன் பிளாசா' கட்டிடம், யாழ்ப்பாணம்.

**தலைவர்:**
திரு.சி.சிவராஜா
(வடக்கு, கிழக்கு வலய முகாமையாளர்)

**பிரதம விருந்தினர்:**
திரு.வி.குமரகுரு
(பிரதி அஞ்சல் மா அதிபர், வடக்கு )

**கௌரவவிருந்தினர்கள்**
சுவாமி சித்ரூபானந்தா
திரு.ஆறுதிருமுருகன்
ஜேக்கப் நிக்கலஸ் அடிகள்

**சிறப்பு விருந்தினர்கள்**
பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம்
பேராசிரியர் கே.குகபாலன்
பீடாதிபதி கே.தேவராஜா

உதவிப் பொதுமுகாமையாளர் (செயற்பாடு அவர்களின் செய்தியை வாசிப்பவர்)
திரு.மா.பரமானந்தன்
(முகாமையாளர் தே.சே.வ.பருத்தித்துறை கிளை)

உதவிப் பொது முகாமையாளர் (அஞ்சல்) அவர்களின் செய்தியை வாசிப்பவர்
திரு.வி.அருளானந்தம்
(முகாமையாளர் தே.சே.வ. யாழ்ப்பாணக் கிளை)

தேசிய சேமிப்பு வங்கியின் கீழ்க் குறிப்பிட்ட சகல நடவடிக்கைகளும் இக் கிளையில் நடைபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்

1. நிலையான வைப்புக்கள்
2. சேமிப்புச் சான்றிதழ்கள்
3. பரிசுதிய சேமிப்பு சான்றிதழ்கள்
4. பென்சன் + கணக்குகள்
5. அறக்கொடைக் கணக்குகள்
6. சாதாரண சேமிப்புக் கணக்குகள்
7. இளைஞர்களுக்கான இத்துரு மித்துரு கணக்குகள்
8. யுவதிகளுக்கான ஸ்திரி கணக்குகள்
9. சிறுவர், சிறுமிகளுக்கான ஹப்பன், புஞ்சி ஹப்பன் கணக்குகள்
10. நிலையான வைப்புக்களுக்கு எதிரான கடன்கள்
11. வீடமைப்பு கடன் வசதிகள்
12. தனிநபர் கடன் வசதிகள்
13. நகை அடைவு பிடித்தல் வசதிகள்

மேற்கூறிய சகல தொழிற்பாடுகளும் ஒரே கூரையின் கீழ் நடைபெறுவதோடு ஏனைய தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகளில் கணக்கு வைத்திருப்போர் பணம் மீளப் பெறவும் வைப்புச் செய்யவும் இங்கு வழியுண்டு என்பதையும் பெருமையுடன் அறியத்தருகின்றோம்.

NSB

வருக! வளம் பல பெருக!
உங்களை அன்புடன் அழைக்கும்
இ.இராஜாமகேந்திரசிங்கம் (முகாமையாளர்)
ஊழியர்கள் (தேசிய [illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# Special Guidance for O/L 2008 Students

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மாதிரிப் பரீட்சை - 2008 டிசம்பர்
General Certificate of Education (Ord.Level) Model Examination - 2008 December

T / 22 / I கணிதம்- II

ஆசிரியர்: கே. உமாகரன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

*(20.11.2008 இன் பிரிவு A இன் தொடர்ச்சி)*

04. அ. சார்பு $y=x^2-6x+8$ இன் வரைபை வரைய பின்வரும் அட்டவணையைப் பூரணப் படுத்துக.

| x | -1 | 0 | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|---|
| y | 15 | 8 | 3 | - | - | - | 3 |

x அச்சு வழியே 10 சிறு பிரிவை ஒரு அலகாகவும் , y அச்சு வழியே 10 சிறுபிரிவை இரு அலகாகவும் எடுத்து வரைபை வரைக.

ஆ. உமது வரைபைப் பயன்படுத்தி
i) சார்பின் சமச்சீர் அச்சின் சமன்பாட்டைக் காண்க.
ii) சார்பின் இழிவு அல்லது உயர்வுப் பெறுமானத்தைக் காண்க.
iii) சார்பு மறையாக இருக்கும் (x) இன் பெறுமான வீச்சைக் காண்க.

இ. i) இச் சார்பினது சமன்பாட்டை $y=(x-3)^2-1$ என்ற சமன்பாட்டால் காட்டலாம் எனக் காட்டுக.
ii) இதிலிருந்து $y=(x+2)^2-3$ என்ற சார்பின் இழிவுப் பெறுமானம் , சமச்சீர் அச்சின் சமன்பாட்டைக் காண்க?

05. கூட்டல் விருத்தி ஒன்றின் n உறுப்புக்களின் கூட்டுத்தொகை $S_n=n^2+4n$ இனால் தரப்படுகின்றது
அ) இத்தொடரின் முதல் மூன்று உறுப்புக்களையும் தருக?
ஆ) இத் தொடரின் பொது வித்தியாசம் யாது?
இ) இத் தொடரின் முதல் 15 உறுப்புக்களின் கூட்டுத்தொகை யாது?
ஈ) கூட்டுத் தொகை 165 ஐப் பெறுவதற்கு முதல் உறுப்பிலிருந்து எத்தனை உறுப்புக்கள் எடுத்தல் வேண்டும்?

06. உயர்புள்ளி 90 ஆகவுள்ள கணித வினாத்தாள் ஒன்றில் மாணவர் குழு ஒன்று பெற்ற புள்ளிகளின் மீடிறன் பரம்பல் கீழே தரப்பட்டுள்ளது.

| வகுப்பாயிடை (புள்ளிகள்) | 20-30 | 31-40 | 41-50 | 51-60 | 61-70 | 71-80 | 81-90 |
|---|---|---|---|---|---|---|---|
| மீடிறன் (பிள்ளைகளின் எண்ணிக்கை) | 12 | 16 | 09 | 30 | 14 | 08 | 11 |


(i) ஆகார வகுப்பாயிடையைக் காண்க?
(ii) ஆகார வகுப்பாயிடையின் நடுப்பெறுமானத்தை எடுகொண்ட இடையாகக் கொண்டு இப் பரம்பலின் இடையைக் கணிக்க? (விடையை கிட்டிய முழு எண்ணில் எடுத்துரைக்க)

(b) 6, 5, 3, 8, 9, 11, 21, 14, 17, 23, 24
மேலுள்ள தரவுத் தொகுதியின்
(i) முதலாம் காலணையைக் காண்க?
(ii) மூன்றாம் காலணையைக் காண்க?
(iii) காலணை இடைவீச்சைக் காண்க?
(5X10=50புள்ளிகள்)

## கணிதம் II
### பிரிவு B

விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01. (a) ஒரு தொகை மாம்பழத்தை விற்றதில் வியாபாரி ஒருவருக்கு 7% நட்டம் ஏற்பட்டது. விற்பனை விலை ரூபா 70 இனால் அதிகரிப்பின் அவருக்கு 7% இலாபம்கிடைத்திருக்கும் வியாபாரி மாம்பழங்களை வாங்கிய விலையைக் காண்க?
(b) 5% பங்கிலாபம் வழங்கும் கம்பனி ஒன்றின் ரூபா 10 பங்குகள் 9 வீதமாக விற்கப்பட்ட போது கஜீபுராஜ் அப் பங்குகளை வாங்குவதற்கு ரூபா 18000ஐ முதலீடு செய்தார் எனின்,
(i) அவர் எத்தனை பங்குகளை வாங்கினார் ?
(ii) அவர் பெறும் வருட வருமானம் எவ்வளவு?

02. 


O ஐ மையமாகக் கொண்டு வட்டத்தில் A,B,C,D,E என்பன வட்டப் பரிதியில் உள்ள புள்ளிகளாகும். $B\hat{A}C = 35^\circ$ எனின் பின்வரும் கோணங்களின்பெறுமானங்களைக் காண்க.

(i) $B\hat{O}C$ ii) $B\hat{D}C$ iii) $A\hat{C}O$ iv) $B\hat{C}O$ v) $A\hat{D}C$ vi) $A\hat{E}C$ vii) $A\hat{B}C$ viii) $D\hat{C}O + D\hat{B}O$

03. நேர்விளிம்புள்ள கருவி, கவராயம், mm/cm அளவுள்ள கருவி ஆகியவற்றை மட்டும் பயன்படுத்தியும் அமைப்புக் கோடுகளைத் தெளிவாகக் காட்டியும்
அ) AB = 7.8 cm, AD = 4.5 cm, $D\hat{A}B = 75^\circ$ கொண்ட இணைகரம் ABCDஐ வரைக.
ஆ) மூலைவிட்டம் BD ஐ வரைக.
இ) முக்கோணி ADB இல் AB,AD,BD ஐ தொட்டுச் செல்லுமாறு வட்டம் வரைக.
ஈ) வட்டத்தின் ஆரையை அளந்து எழுதுக.

04. 


O ஐ மையமாகக் கொண்ட வட்டத்தில் நாண் PQ = 48cm, PQ ⊥ AC BC = 16 cm எனின்,
(I) OQ இன் நீளத்தைக் காண்க?
(II) AC இன் நீளத்தைக் காண்க?

(b) இணைகரம் ABCD இல் பக்கங்கள் AB, BC, CD, DA என்பவற்றின் நடுப்புள்ளிகள் முறையே P, Q, R, S என்பனவாகும் எனின் $\Delta ASP \equiv \Delta CQR$ என நிறுவுக.

05. A யில் இருந்து நேர் வடக்கே கிடையான பாதை ஒன்றிலே சீரான கதியுடன் செல்லும் வானூர்தி ஒன்று A யில் நிற்கும் ஒருவனுக்கு $30^\circ$ ஏற்றக் கோணத்திலும் அதே வேளை A யில் இருந்து நேர் வடக்கே 100m தூரத்தில் உள்ள B யில் நிற்கும் ஒருவருக்கு வானூர்தி $34^\circ$ ஏற்றக் கோணத்திலும் தென்பட்டது எனின் வானூர்திக்கும் தரைக்கும் இடைப்பட்ட நிலைக்குத்து உயரத்தைக் காண்க.
(நோக்குனரின் உயரத்தைப் புறக்கணிக்க.)

06. ஒரு குறித்த கிராமத்தில் இருந்த சனத்தொகையினரின் வாசிப்புப்பழக்கம் பற்றிய ஆய்வின் போது உதயன், தினக்குரல், வலம்புரி ஆகிய பத்திரிகைகளை வாசிப்பதாக அறியப்பட்டது. அதில் ஏதாவது ஒன்றை மட்டும் வாசிப்போர் எண்ணிக்கை 60% ஆகவும் ஏதாவது இரண்டை மட்டும் வாசிப்போர் 25% ஆகவும் , உதயன் அல்லது தினக்குரல் பத்திரிகையை வாசிப்போர் 80% ஆகவும் , தினக்குரல் அல்லது வலம்புரிப் பத்திரிகையை வாசிப்போர் எண்ணிக்கை 60% ஆகவும் அங்கு குறைந்தது ஒரு பத்திரிகையாவது வாசிப்போர் எண்ணிக்கை 90% ஆகவும் காணப்பட்டது உதயன் பத்திரிகையை வாசிப்போர் எண்ணிக்கை 50% உம் ஆகும்.

1) இத்தரவை வென்வெரிப்படத்தில் காட்டுக.
2) உதயன் பத்திரிகையை மாத்திரம் வாசிப்போர் எத்தனை சதவீதம்?
3) தினக்குரல் பத்திரிகையை மாத்திரம் வாசிப்போர் எத்தனை சதவீதம்?
4) மூன்று பத்திரிகையையும்வாசிப்போர் எத்தனை சதவீதம்?
5) எந்தவொரு பத்திரிகையையும் வாசிக்காதோர் எத்தனை சதவீதம்?
(5 X 10 = 50 புள்ளிகள்.)

## கணிதம் I

பிரிவு A இல் உள்ள பதிப்பு பிழையான திருத்தங்கள்

04) -2 + 8 இன் பெறுமானம் யாது?

05) $\sqrt{256\, X^2}$ என்பதனை சுருக்குக?

17) $a = \sqrt{32}$ எனின் $a^2 - 15$ இன் பெறுமானம் யாது?

## கணிதம் II

பிரிவு A இல்

1) அ) (a) காரணிப்படுத்துக
$ax^2 - a^3$




வடமராட்சி சரஸ்வதி மகளிர் வித்தியாலய மாணவர்களின் கழுத்துப்பட்டி (ரை) அறிமுகவிழாவிலே பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி வலய கல்வி நிர்வாக அபிவிருத்திப் பிரதிப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் சிறப்பு விருந்தினரான இலங்கை மெதடிஸ்த திருச்சபை கட்டைவேலி முகாமைக்குரு. வணபிதா.டேவிட் அழகராசா அடிகளார் ஆகியோர் அதிபர் எஸ்.செல்வானந்தனால் வரவேற்கப்படுவதைப் படத்தில் காணலாம். (218)



கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தின் மதிப்பளித்த நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள்.
நிகழ்வின் பிரதம விருந்தினரான வடமராட்சி வலய பிரதிக் கல்விப் [illegible] சாதனை படைத்த ஆசிரியை செல்வி ஆனந்தநாயகி கந்தசாமிக்கு பரிசில் வழங்குவதையும் திருமதி நந்தினி உதயகுமார், இலங்கை வங்கியின் நெல்லியடிக்கிளை [illegible] க்கு பரிசில் வழங்குவதையும் முதல் 3 படங்களிலும் காணலாம்.
தரம் 5 மாணவர்கள் நடித்த காத்தவராயன் நாட்டுக்கூத்தின் ஒரு காட்சியை இறுதிப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



அமரர்.

## சபாபதி கந்தசாமி

(தலைவர், மானிப்பாய் பரிஷ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், மானிப்பாய்)

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

அன்பு முகமும் தயவான பேச்சுக்களும்
மங்காத தெளிவுடன் மனங்குளிர
எடுத்துரைக்கும்
அறிவுரைகளும் அன்புகளை
அரவணைக்கும்
அமைதியான சிந்தனையும்
பொங்கு நினைவுகளுடன்
பூமியிலே நீர் வாழ்ந்தீர்!
காலனவன் கண்ணுற்று
கணக்கையும் முடித்து விட்டான்
உங்கள் பிரிவால் துயருற்று
உளம் கலங்குகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.


பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்,
ப.நோ.கூ.சங்கம், மானிப்பாய்.

ப.நோ.கூ.சங்கம்,
மானிப்பாய்.

(சி/555808)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

## அமரர் மாரிமுத்து கந்தசாமி



பிறப்பு: 27.05.1932 இறப்பு: 03.11.2008

சரவணை கிழக்கு, வேலணை-09ஐ பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டு

அன்பின் உருவமாய்
பண்பின் உறைவிடமாய்
பாசமுள்ள தந்தையாக
பரிவுள்ள மாமாவாக
ஆசையுள்ள அப்பப்பாவாகவும்
அம்மப்பாவாகவும் இருந்து
எம்மை நல்வழிப்படுத்தி வாழவைத்த
அன்புத் தெய்வமே!
உங்கள் இனிய நினைவுகள்
எங்கள் எண்ணங்களில்
என்றென்றும் நிலைத்திருக்கும்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (01.12.2008) திங்கட்கிழமை வில்லூன்றித் தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வு எதிர்வரும் (03.12.2008) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

சரவணை கிழக்கு,
வேலணை-09.

(80181)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச எயிட்ஸ் தினம் - 01.12.2008
# சிறப்பு மலர்

## HIV/AIDS ஐ கட்டுப்படுத்த ஒன்றுபட்டு உழைப்போம்



சர்வதேச எயிட்ஸ் தினம் இன்று உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படுகின்றது. இலங்கையிலும், யாழ்.மாவட்டத்திலும் இந்நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இலங்கையைப் பொறுத்தவரை HIV/AIDS நோயின் பரம்பல் மட்டுப்படுத்தப்பட்டதாக திருப்திகரமான நிலையே காணப்படுகின்றது. யாழ்.மாவட்டத்தில் இதுவரை 38 நோயாளர்களே இந்நோயுடன் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களில் இன்னமும் 12 பேர் உயிர் வாழ்கின்றனர். தற்போது யாழ்.மாவட்டத்தில் இந்நோய்ப் பரம்பல் மிகக் குறைவாகக் காணப்படினும், எதிர்காலத்தில் இந்நோய் பரவக்கூடிய சாதகமான பல காரணிகள் காணப்படுகின்றன.

தற்போது யாழ்.மாவட்டத்தில் பல அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் சுகாதாரத் திணைக்களத்தின் ஒருங்கிணைப்புடன் பல HIV/AIDS தடுப்பு நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. இதன் பலனாக HIV/AIDS பற்றிய ஓர் விழிப்புணர்வு யாழ். மாவட்டத்தில் ஏற்பட்டு வருவதை காணக்கூடியதாகவுள்ளது. இந்நோயின் பரம்பலை யாழ்.மாவட்டத்தில் எதிர்காலத்தில் மேலும் தடுக்க பின்வரும் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும்.

1. இந்நோய் பற்றிய தெளிவான விழிப்புணர்வு படித்தவர்கள் முதல் பாமரர்கள் வரை ஏற்படுத்தப்பட வேண்டும்.
2. இந்நோய் பரவக்கூடிய ஆபத்து இலக்கினரை (High risk groups) மையப்படுத்தி விசேட செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.
3. இந்நோய் பரவக்கூடிய வைத்தியசாலை போன்ற நிலையங்களில் ஊழியர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுவதுடன், நோய்ப்பரம்பல் பாதுகாப்பு நடைமுறைகளும் இறுக்கமாகப் பின்பற்றப்பட வேண்டும்.
4. HIV/AIDS நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளர்களை சமூகத்திலிருந்து புறந்தள்ளி வைக்காது அவர்களை ஏற்றுக்கொள்ளும் மனோபக்குவம் சமூகத்தில் வளர்க்கப்பட்டு, அவர்கள் அன்போடு பராமரிக்கப்பட்டு மனிதாபிமான உதவிகள் வழங்கப்பட வேண்டும்.

HIV/AIDS நோயினால் பாதிக்கப்பட்டவர்கட்கு அவசர மனிதாபிமான உதவிகளை வழங்கும் நோக்குடன் எமது பணிமனையில் HIV/AIDS மனிதாபிமான நிதியம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. HIV/AIDS நோயால் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் வாழ்வில் நம்பிக்கை ஒளியேற்றும் இந்த உன்னத பணிக்கு உதவிக்கரங்களை அன்போடு எதிர்பார்க்கின்றோம்.

இன்றைய சர்வதேச எயிட்ஸ் தினத்தில் இந்நோயின் பரம்பலை எமது பிரதேசத்தில் பூரணமாகக் கட்டுப்படுத்த அனைவரும் திடசங்கற்பம் பூண்டு உழைப்போம்.

**வந்தபின் தவிப்பதை விட வருமுன் காப்போம்.**

**வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன்,**
*பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.*

## சிந்தனைக்காக.......



1. எமது சமூகத்திலுள்ள ஒவ்வோர் அங்கத்தவர்களும் எம் கலாசாரத்தைத் தழுவி வாழ்க்கைப் பாதையினை நடாத்துவதன் மூலமும் துர்நடத்தைகளிலிருந்து விலகிச் செல்வதனாலும் இப் பாலியல் தொற்று நோயான (HIV/AIDS) இனை எம் சமூகத்திலிருந்து ஒழிக்க முடியும்.

2. பாலியல் நோயினால் (HIV/AIDS) பாதிக்கப்பட்டோரையோ அல்லது அடையாளம் காணப்பட்டவரையோ எம் சமுதாயத்திலிருந்து புறந்தள்ளாது அவர் தனது வாழ்க்கையிலிருந்து சலிப்படைந்து விலகிக் கொள்ளாதவராக வாழ்வதற்கு நாம் அவருக்கு என்றும் உதவிக் கரமாக இருப்பது (ஆதரவு, ஆலோசனை வழங்கிக் கொள்வது) அவசியமானது.

**வைத்தியகலாநிதி A.E.ஞானசோதி,**
*பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.*

## எதுவும் விதிவிலக்கல்ல!



எந்த ஒருவரும் HIV தொற்றுக்கு உள்ளாக இடமுண்டு. இனம், மதம், செல்வநிலை, சமூக அந்தஸ்து போன்ற எதுவும் இதற்கு விதிவிலக்கானதல்ல. ஆள்களின் ஆரோக்கிய நிலையும் கூட தொற்றில் ஆதிக்கம் செலுத்துவதில்லை. எந்த ஒருவரதும் பாலியல் நடத்தையே HIV தொற்றை ஏற்படுத்தும் பிரதான காரணியாகக் கொள்ளப்படுகிறது. இறுதியாக, HIV/AIDS இலிருந்து உங்களால் மட்டுமே உங்களைப் பாதுகாக்க முடியும்.

"பொறுப்புடன் நடந்துகொள்ளுங்கள், விழிப்புப் பெறுவீர்கள்."

**வைத்தியகலாநிதி கு.கணேசலிங்கம்,**
*பொறுப்பு வைத்திய அதிகாரி,*
*பாலியல் நோய்கள் மற்றும் எயிட்ஸ் தடுப்பு நிகழ்ச்சித் திட்டம்,*
*போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.*

## HIV/AIDS பரவுவதை தடுக்க தனிமனித விழிப்புணர்வே அவசியமானது



சர்வதேச HIV/AIDS தினம் ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் மாதம் முதலாம் நாள் HIV/AIDS தொடர்பில் உலக மக்கள் மத்தியில் கவனத்தை ஈர்ப்பதற்காகவும் ஒவ்வொருவருக்கும் நோய்ப் பாதுகாப்பு மற்றும் நோயாளர் பராமரிப்பு தொடர்பிலான சாதகமான மனப்பான்மை மாற்றத்தை தூண்டுவதற்காகவும் அனுசரிக்கப்படுகிறது. தற்போது உலகில் ஆபிரிக்க, தென்கிழக்காசிய நாடுகளே புதிய HIV தொற்றுக்கள் ஏற்படுவதில் முன்னிலை வகிக்கின்றன. ஆரம்பகாலத்தில் அதிகரித்த HIV தொற்றுக்களைக் கொண்டிருந்த ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகள் வெளிப்படையான விழிப்புணர்வூட்டல் மற்றும் பாதுகாப்பு முறைகள், சிகிச்சை வசதிகளை செய்து கொடுத்ததன் மூலம் பெரும்பான்மையான புதிய தொற்றுக்களைக் கட்டுப்படுத்தியுள்ளன. தற்போது எமது நாடு குறைவான HIV தொற்றுநிலையைக் கொண்ட நாடாகவுள்ளது. எனினும் ஐக்கிய நாடுகளின் AIDS இற்கான நிறுவனத்தின் அறிக்கையின் பிரகாரம் உறுதி செய்யப்பட்டதை விட HIV தொற்றுகள் அண்ணளவாக ஐந்து மடங்கு அதிகமெனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எமது நாட்டைப் போன்றே குறைவான HIV தொற்றுக்களைக் கொண்டிருந்த கம்போடியா போன்ற நாடுகளில் திடீரென நோய்ப்பரம்பல் அதிகரித்ததைப் போன்று எமது நாட்டிலும் ஏற்பட வாய்ப்புள்ளது. இதற்கு எம்மவர் மத்தியில் ஏற்பட்டு வருகின்ற சமூக கலாசார மாற்றங்கள், உள்நாட்டு, வெளிநாட்டு புலப்பெயர்வுகள், தகவல் தொடர்பாடல் முறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் மற்றும் சமகால பொழுதுபோக்கு ஊடகங்களில் தூண்டுதல்கள் பிரதான பங்கு வகிக்கின்றன.

மாறிவரும் பண்பாட்டுக் கோலங்களுக்கு ஏற்ப இளம் சந்ததியினர் மத்தியில் பாலியல் சார்ந்த வெளிப்படையான அறிவூட்டல்களும், தற்பாதுகாப்பு உத்திகள் தொடர்பான நடத்தை மாற்றங்களை ஏற்படுத்துவதும் இன்றியமையாதது. தளர்வடைந்து செல்லும் குடும்பக் கட்டமைப்புகளை சீர்செய்வதுடன், பெற்றோர் பிள்ளைகளுக்கிடையேயான நட்புறவான தொடர்பாடல்களும், சமயம் சார்ந்த மற்றும் சமயம் சாராத சமூக நிறுவனங்களின் நோய்ப் பாதுகாப்பு தொடர்பிலான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மூலமாகவும், ஒவ்வொரு தனிநபருக்கும் தனிமனித விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுவதன் மூலமாகவும் மாத்திரமே எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய ஆபத்தை குறைத்துக்கொள்ள முடியும். HIV/AIDS இனைக் கட்டுப்படுத்துவதற்கு அனைவரும் கைகோர்ப்போம்.

**திரு.சி.பிரணவன்,**
*மாவட்ட சுகாதாரக் கல்வி உத்தியோகத்தர்,*
*பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.*

அனுசரணை:
30 ஆண்டுகால சேவை நிறைவில்
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
106, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்



## நோய் பரவாது தடுக்கும் வழி



HIV/AIDS உலகில் மனித குலத்தை அச்சுறுத்தும் நோயாக இன்று உள்ளது. உடலில் உள்ள நோய் எதிர்ப்பு சக்தியை அழிக்கும் அல்லது பல வீனமடையச் செய்யும் நோயாக இனங்காணப்பட்டுள்ளது. இந்நோய் எவ்வாறு தோன்றியது, எவ்வாறு பரவலடைந்திருக்கிறது என்று நோக்குவது ஒரு புறமிருக்க அதை எவ்வாறு பரவலடையாது தடுக்கலாம், இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவலாம் என்பது பற்றிச் சிந்திப்பது தலையாய கடமையாகும்.

இந்நோயானது பாதுகாப்பற்ற குருதிப்பரிமாற்றம், பாதுகாப்பற்ற பாலியல் தொடர்புகளால் பரவுவதற்கான சாத்தியம் அதிகமாக உள்ளது. இது யாருக்கு யாரூடாக, எப்படி தொற்றியது, யாரைத் தண்டிப்பது என்பது பற்றிச் சிந்திப்பதால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எதுவித நன்மையும் கிடைக்காது. பாதிப்புக்குள்ளானவர்களை சமூகத்தால் வெறுத்து ஒதுக்காது அவர்களுக்கு சமூகத்தில் ஏனைய மக்களைப்போல் வாழ்வதற்கான உரிமையைப் பெற்றுக் கொடுப்பதற்குத் தேவையான உதவிகளைச் செய்ய வேண்டியது எமது சமுதாயத்தின் கடமையாகும்.

இளவயதினரிடையே தகவல் தொடர்பு சாதனங்களின் பயன்பாடு அதிகரித்துக் காணப்படுகின்றது. இவ்வாறான நிலைமை அவர்களின் வாழ்வில் கிளர்ச்சியூட்டும் உணர்வுகளை தூண்டுவதாக அமைகின்றது. எனவே இந்நோய் பற்றிய விழிப்புணர்வினை இடைநிலைக் கல்விக் காலத்திலேயே ஏற்படுத்தி மேலும் இந்நோய் பரவாது சுபீட்சமான சமூகத்தை உருவாக்க முடியும்.

**பேராசிரியர் ம.சிவநாதன்,**
*தலைவர்,*
*அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்.*

## HIV/AIDS நோயினால் பாதிக்கப்பட்டோருக்கு உதவுதல்



யாழ்.மாவட்டத்தில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களை உள்ளடக்கி HIV/AIDS நோயினால் பாதிப்படைந்தவர்களுக்கு உதவுவதற்கென நிதியமொன்று உருவாக்கப்பட்டு எமது பணிமனையில் செயற்பட்டு வருகிறது. இதற்கென இலங்கை வங்கி யாழ்ப்பாணத்தின் மேற்றரக் கிளையில் **நடைமுறைக் கணக்கு (கணக்கிலக்கம் 4194142)** ஒன்று ஆரம்பிக்கப்பட்டு HIV/AIDS நோயினால் பீடிக்கப்பட்டோருக்கு மாதாந்த உதவித் தொகையாக ஒரு தொகை நிதியினைக் கொடுத்துதவுகிறோம்.

எனவே, இந்த உன்னத பணிக்கு உதவ விரும்புவோர் மேற்படி வங்கிக்கணக்கிற்கு வைப்புச் செய்தோ அல்லது நேரடியாக எமது பணிமனையினை தொடர்பு கொண்டோ உங்களது பங்களிப்பினைச் செய்ய முடியும் என்ற செய்தியினை இன்றைய சர்வதேச எயிட்ஸ் தினத்தில் சுகாதாரத் திணைக்களத்தின் சார்பில் உங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்

நோய் வராது தடுக்கலாம், வந்தால் மரணம் நிச்சயம்.

**திரு.இ.தவகுமாரன்,**
*நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், திட்டமிடல் பிரிவு,*
*பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,*
*யாழ்ப்பாணம்.*

## World AIDS Day-1 December 2008
## Stop AIDS. Keep the Promise (Leadership)



Globally, It is estimated that 15. 4 million women are currently living with HIV and an estimated 2 million children (under 15 years) living with HIV, most of who were infected by their mothers. A large number of these children will not live to adulthood. In Sri Lanka, the number of women and children living with HIV/AIDs is low, however the country is not immune to this virus.

Mother-to-child transmission (MTCT) is an issue that directly affects women and at the same time increases the spread of HIV.MTCT occurs when an HIV positive woman passes the virus to her baby during pregnancy, labor and delivery, or breastfeeding.

In Sri Lanka, UNICEF has collaborated with the Government to prevent mother-to-child transmission of HIV/AIDs. This project focuses on integrating MTCT strategies nto maternal and child health services and improve access of women and children to antiratro viral therapy and paediatric care. The project establishes linkages with adolescent prevention through life-skill education and protection interventions targeting the most at risk and especially vulnerable adolescents.

*UNICEF Jaffna supports the RDHS in commemorating World AIDS Day*

**Dr.Diane Araki,**
Head,Head of Zonal office,
Unicef,Jaffna.

## "எயிட்ஸ் நோய்த்தடுப்பு எமக்கு ஒரு சவால்"



இன்று உலகின்கண் அண்ணளவாக 50 மில்லியன் மக்கள் HIV கிருமித் தொற்றுடன் வாழ்வதாகத் தரவுகள் கூறுகின்றன. இவர்களில் அநேகமானோர் ஆபிரிக்க நாடுகளிலும், அடுத்தபடியாக தென்கிழக்காசிய நாடுகளிலுமே உள்ளனர். குறிப்பாக இந்திய தேசம் முதல் நிலையில் உள்ளதுடன் கட்டுப்பாட்டினுள் கொண்டு வருவது இன்னமும் முடியாத காரியமாகவே உள்ளது. எமது நாடும் அதே பண்பாட்டு விழுமியங்களைக் கொண்டதே. இந்த நாடுகளில் HIV பரவுகையில் பங்களிப்புச் செய்யும் முக்கிய காரணியாக பாலியல் பண்பாட்டுத் தடைகளே (Cultural barriers) கூறப்பட்டுள்ளது. ஏனெனில் உலகில் 98% HIV தொற்றுக்கள் பாலியல் சார்ந்த செயற்பாடுகளாலேயே ஏற்பட்டுள்ளது. எனவே HIV பரவல் தடுப்பிற்கு பாலியல் ரீதியான செயற்பாடுகளிலேயே கவனம் செலுத்தப்படவேண்டியுள்ளது.

எமது பிரதேசங்களில் பாலியல் ரீதியான செயல்கள் பண்பாட்டில் ஏற்கப்படாத, வெளிப்படுத்தப்படக்கூடாத நிலையிலேயே உள்ளன. இவற்றைக் கீழ்த்தரமான விடயமாகப் பார்க்கும் தன்மை உள்ளது. இதனாலேயே எயிட்ஸ் நோயாளரும் ஒதுக்கப்படும், பழிக்கப்படும் நிலையில் உள்ளனர். HIV/AIDS தடுப்பில் பாலியல் ரீதியான செயற்பாடுகளின் முன்னெடுப்பே அவசியமாகிறது. மேற்கத்தேச சமூகங்களில் HIV பரவுகையைக் கட்டுப்பாட்டினுள் கொண்டுவர முடிந்தமைக்கான காரணம் பாலியல் ரீதியான திறந்த அணுகுமுறைகளே. ஆனால் எமது பிரதேசங்களில் இப்படியான அணுகுமுறைகளை முன்னெடுப்பது மிகவும் சிக்கலான விடயமாகவே இன்னமும் உள்ளது. அது பண்பாட்டு விழுமியங்களுடன் இறுக்கமாக இணைந்திருப்பதால் AIDS நோய்த்தடுப்புக்கான பாலியல் செயற்பாடுகள் பண்பாட்டு சிதிலமாகவே கருதப்படும் நிலையுள்ளது. இது எமக்கு எயிட்ஸ் நோய்த் தடுப்பில் பாரிய ஒரு சவால்.

எனவே பாலியல் ரீதியான அறிவு, மனப்பாங்கு போன்றவற்றை மக்கள்மயப்படுத்துவதன் ஊடாக இளம் சமூகத்தினர் மத்தியல் பாலியல் ரீதியான நேர்முகமான மனப்பாங்கை (Positive attitude) ஏற்படுத்தும் போதே AIDS நோய் பரவல் தடுப்பு என்பது சாத்தியமானதாகும். மாறாக மறைக்கப்படும் வரை சாத்தியப்படாது என்பதே யதார்த்தமான உண்மை.

**திரு.கு.நக்கீரன்,**
*பொது சுகாதாரப் பரிசோதகர்,*
*பாலியல் நோய்கள் மற்றும் எயிட்ஸ் தடுப்பு நிகழ்ச்சித் திட்டம்,*
*போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







''சரக்கு வைச்சிருக்கேன்!
இறக்கி வைச்சிருக்கேன்''

தமிழ் சினிமாவின் அடையாளமான - வக்கிரமான இரட்டை அர்த்த வரிகளோடு - குத்துப்பாட்டொன்று உச்சஸ்தாயியில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. அந்த ஒலியில் சுற்றுவட்டாரமே அதிர்ந்து கொண்டு இருக்கின்றது. மண்டபம் முழுதையும் புகைமண்டலம் ஆக்குமளவுக்கு நிமிடத்துக்கொரு சிகரெட்டாய் புகைத்தபடி, கைகளில் மதுக் கிண்ணத்தோடு ஆவேசமான ஆட்டத்தில் இளைஞர்கள் ஈடுபட்டிருக்கின்றனர். அவர்களின் நண்பர்களும், நண்பிகளும் இந்தக் 'கண்கொள்ளாக்காட்சியை' கைதட்டி, ரசித்து மகிழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இங்கு விவரிக்கப்படுகின்ற சம்பவம் கொழும்பிலுள்ள இரவுக்களியாட்ட விடுதிகளில் நடந்திருக்கலாம் என்று யாராவது நினைத்திருந்தால், தயவு செய்து அந்த எண்ணத்தை மாற்றிக்கொள்ளுங்கள். இந்த களியாட்டக்கூத்து நிகழ்வுகள், 'பிரிவுபசார விழா' (going down party) என்ற பெயரில் யாழ். பல்கலைக்கழகத்தில்தான் இம்மாதம் அரங்கேறின; அரங்கேறிக் கொண்டுமிருக்கின்றன.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீது தமிழ்ச்சமூகத்திடம் தனி மதிப்பும், மரியாதையும் உண்டு. ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழக மாணவர்களால் நிகழ்த்தப்படுகின்ற பகிடிவதை நிகழ்வுகளைக் கூட தமிழ மக்கள் மன்னிப்பது இந்த மதிப்பின் அடிப்படையிலேதான். இந்த மதிப்பு வெறுமனே சமூகத்தின் உயர்நிலைக்கல்வியாளர்கள் என்ற பகட்டுக் கௌரவத்துக்காக ஏற்பட்டதல்ல. காலம்காலமாய் தமிழினத்தின் விடிவுக்காகப் பல்கலைக்கழக மாணவர்கள் கொடுத்து வந்த விலையினாலேயே, இந்த நம்பிக்கை பெறப்பட்டது. இலங்கையிலுள்ள மற்றைய பல்கலைக்கழகங்களையும் விட யாழ். பல்கலைக்கழகம் தனித்துமாய் துலங்குவதற்கும் இதுவே காரணமெனலாம். மற்றைய பல்கலைக்கழகங்கள் எல்லாம் ஏட்டுச்சுரைக்காய்த்தனமான புத்தகப்பூச்சிப் பட்டதாரிகளையே உற்பத்தி செய்து வருகின்றன. ஆனால், யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறுகின்ற ஒவ்வொரு மாணவனும் அல்லது மாணவியும் சமூகப் பிரக்ஞை கொண்ட புதிய சிந்தனாசக்திகளாகவே வடிவமெடுத்துவந்தனர்.

தமிழ்த் தேசியப் போராட்டத்தின் ஆரம்பத்தில், பல்வேறு போராட்டக்குழுக்களின் அரசியல் பள்ளியாக யாழ். பல்கலைக்கழகமே விளங்கியது. மக்களின் இருளைக் களைந்து, விடியலை ஏற்படுத்த தத்தமது கருத்தியல் வாதங்களைக் கட்டமைத்து அதற்குப் பொருத்தமான போராட்ட அமைப்புகளோடு இணைந்து மாணவர்கள் மக்களுக்காகப் பாடுபட்டார்கள். தமிழ்த் தேசியப் போராட்டம் இவ்வளவுதூரம் வீறுகொண்டெழுவதற்கு அக்காலத்தில் பல்கலைக்கழக மாணவர்களால் தோற்றுவிக்கப்பட்ட புரட்சிகரக் கருத்துகளும் மிக முக்கியமான காரணியாகும். இதை எவரும் மறுக்க முடியாது.

ஆரம்பத்தில் கருத்தியல்ரீதியாக மட்டுமே மக்களுக்காக உழைத்த பல்கலைக்கழக மாணவர்கள் காலப்போக்கில் செயற்பாட்டு ரீதியான நடவடிக்கைகளிலும் முனைப்போடு பங்கெடுக்கத் தொடங்கினர். அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கியவர்களில் பலர் தமிழ் இயக்கங்களின் தலைமைப்பீட உறுப்பினர்களாகவும் மாறினர். ஒரு காலத்தில் தமிழ் மக்களிடையே மதிப்புப் பெற்று விளங்கிய ஈரோஸ் அமைப்பின் தலைவரும், தற்போது விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகருமான பாலகுமாரன் இதற்கு மிகச் சிறந்த உதாரணம்.

பல்கலைக்கழக மாணவர்களின் ஒரு ...ரார் நேரடியாக ஆயுதப் ...பாராட்டங்களில் குதிக்க இன்னொரு ...ரார் விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவான பிரசார நடவடிக்கைகளுக்காக, மக்களோடு இணைந்து தொழிற்படத் தொடங்கினர். எண்பதுகளின் ஆரம்பத்தில் 'மண்சுமந்த மேனியர்' என்ற நாடகத்தைப் பல்கலைக்கழக மாணவர்கள் ஈழத்தின் பல பாகங்களிலும் ஆற்றுகை செய்தனர். ஈழவிடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாடுகளை இந்நாடகம் மிகத் தெளிவாக மக்களிடம் எடுத்துச் சென்றது. இதனைவிடப் பெருமளவு இளைஞர், யுவதிகள் ஆயுதப் போராட்டக் குழுக்களோடு இணைவதற்கும் இந்த நாடகம் ஊக்கியாக இருந்தது.

இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல, ஈழ விடுதலைப் போராட்டத்தின் மீது சர்வதேசத்தின் கண்களைக் கூர்ந்து பார்க்கவைத்த 'பொங்குதமிழ்' நிகழ்வும், எவருடைய தூண்டுதலுமின்றி, முற்றுமுழுதாக யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினாலேயே முன்னெடுக்கப்பட்டது.

1995 ஆம் ஆண்டு 'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கை மூலம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியது இலங்கையரசு. அதன்பின் கைதுகள், காணாமற்போதல்கள் பெருமெடுப்பில் நிகழ்ந்தன. நூற்றுக்கணக்கான குடாநாட்டு மக்கள் படுகொலை செய்யப்பட்டு செம்மணியில் புதைக்கப்பட்டனர். ஆகமொத்தத்தில் யாழ்.குடாநாடு ஒரு திறந்தவெளிச் சிறைச்சாலையாகவே இருந்தது. இந்த அவலநிலையை சர்வதேசத்திற்கு எடுத்துரைக்க பல்கலைக்கழக மாணவர்கள் [illegible] இராணுவத்தின[illegible] கெடுபிடிகளையும் மீறி, 'பொங்குதமிழ்' நிகழ்வை நடத்தியும் காட்டினார்கள். இந்தப் பொங்குதமிழ் நிகழ்வு ஈழத்தில் மட்டுமல்லாது, புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழ்மக்களிடையே மாபெரும் எழுச்சியை, உண்டாக்கியது. அதனால்தான் இன்றுவரையும் வருடாவருடம் பொங்குதமிழ் நிகழ்வுகள் நடந்தேறி வருகின்றன.

பல்கலைக்கழக மாணவர்களின் மக்கள் நலச் செயற்பாட்டுக்கு இன்னொரு உதாரணமாக முகமாலைப் பகுதியில் சிக்குண்டிருந்த மக்களை மீட்டெடுத்த சம்பவத்தைக் கூறலாம். ஓர் இராணுவ நடவடிக்கையின்போது, விடுதலைப் புலிகளின் தாக்குதலில் இருந்து தப்பித்துக்கொள்வதற்காக முகமாலை, பளைப் பகுதிகளில் உள்ள பொதுமக்களை இராணுவத்தினர் மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தினர். இதனை அறிந்த பல்கலைக்கழக மாணவர்கள் திரண்டெழுந்து, அப்பகுதிக்கு துணிச்சலோடு சென்று குண்டு மழைகளுக்கும் அஞ்சாது படையினரின் பிடியில் இருந்த மக்களை மீட்டெடுத்து வந்தனர்.

இப்படித் தம்முடைய செந்நீரையும் கண்ணீரையும் சொரிந்து விடுதலைப் பயிருக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் உரமூட்டினர். தமிழ்மக்களுக்கு என்ன இடர் வந்தாலும் முன்னின்று குரல் கொடுப்பதும் அஹிம்சை வழியிலான போராட்டங்களை நடத்துவதும்

**~ பிரமன் ~**

பல்கலைக்கழக சமூகத்தின் செயற்பாடுகளாயிருந்தன. இதனால் எத்தனையோ தடவைகள் அடக்குமுறையாளர்கள் பல்கலைக்கழக மாணவர்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டிருந்தனர். இதில் பல மாணவர்கள் தமது உயிரையும் தியாகம் செய்திருந்தனர். இந்தத் தியாகங்கள்தான் தமிழ்மக்களின் மத்தியில் நம்பிக்கை நட்சத்திரங்களாகப் பல்கலைக்கழக மாணவர்களை மிளிரச்செய்தன.

இப்போது நாலாபுறமும் இராணுவத் தாக்குதல்களால் சிக்கிச் சின்னாபின்னமாகி, வாழிடமின்றி, உணவின்றி, சாவுகளும், நோய்களும், துயரங்களுமே துணையாகிப்போன நிலையில் வன்னிமக்கள் சிக்குண்டுள்ளனர். நாளும், பொழுதும் சாவுக்குள் வாழ்கின்ற வன்னிமக்களின் துயரம்கண்டு அகிலமே கண்ணீர்விட்டுக் கதறுகின்றது. இதுநாள் வரையும் அடங்கிப்போய்க் கிடந்த தமிழகத்து உறவுகள் கூட இப்போது ஈழத்தமிழர்களுக்காய் உரத்தக் குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளனர். தினமும் ஈழத்தமிழருக்கு ஆதரவான போராட்டங்கள் நிகழ்ந்தபடியேயுள்ளன. அவ்வளவு ஏன்? தமிழகத்தின் முன்னணி நடிகர்களாக ரஜனிகாந்தும், கமலஹாசனும் ''வன்னிமக்கள் துயரப்படும் வேளையில் எம்க்கு கேளிக்கையான பிறந்தநாள் கொண்டாட்டங்கள் வேண்டாம்'' என்று தமது பிறந்த தினங்களைக் கொண்டாடாது தவிர்த்துள்ளனர்.

ஆனால், இதுநாள் வரையும் தமிழ்மக்களின் குரல்வளையாய் விளங்கிய பல்கலைக்கழக மாணவர்களோ, கேளிக்கையின் உச்சநிலையை வெளிப்படுத்தும் வகையிலான 'வழியனுப்பும் விருந்துகளைத்' தடல்புடலாக நடத்துகின்றனர். 'அலக்கேஷன்' எனப்படுகின்ற, மதுபானங்களை வாங்குவதற்கான நிதிப்பங்கீட்டுக்காக ஒருவரையொருவர் அடித்துக்கொள்கின்றனர். இதில் வேதனை என்னவெனில், பல்கலைக்கழகத்தில் பெருமளவு வன்னிப்பகுதி மாணவர்களும் கற்றுவருகின்றனர். அவர்களின் உறவுகளும் குடும்பங்களும் என்ன ஆனார்கள் என்றே தெரியாத நிலை. தம் சொந்தங்களை எண்ணி வன்னிமாணவர்கள் இரத்தக் கண்ணீர் வடிக்கையில், அவர்களின் நண்பர்கள் இந்தக் கேளிக்கைக் கூத்துகளைக் கோலாகலமாகக் கொண்டாடி வருகின்றனர்.

முன்னரெல்லாம் சாதாரண ஒரு பொதுமகன் இராணுவ வாகனம் மோதிச் செத்துவிட்டாலே நியாயம்கேட்டு வீதியில் இறங்கிப் போராடிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்களா இவர்கள்? என்ற கேள்வியே இப்போது எல்லோரிடமும் எழுந்துள்ளது. அந்தளவுக்கு இவர்களின் களியாட்டங்கள் - பல்கலைக்கழகத்தில் உள்ள பிறமாணவர்களின் கற்றல் நடவடிக்கைக்கு இடையூறு ஏற்படுத்தும் அளவிற்கு - எல்லைமீறிப் போகத் தொடங்கியுள்ளன.

இப்போது யாழ்ப்பாணத்தில் முன்னைய காலங்களைக் காட்டிலும் மிக இறுக்கமான சூழல் நிலவுவது உண்மைதான். அதனால், வன்னிமக்களின் அவலத்தைப் போக்க யாழ். பல்கலை மாணவர்கள் அகிம்சை வழியில்கூட போராடமுடியாது என்பதே யதார்த்தம். எனவே, தற்போது அத்தகைய போராட்டங்களை பல்கலைக்கழகச் சமூகத்திடமிருந்து தமிழ்ச்சமூகம் எதிர்பார்க்கவுமில்லை. ஆனால், எங்கேயோ உள்ள - களியாட்டங்களுக்குப் புகழ்பூத்த - தமிழகத்தில் உள்ள நடிகர்கள்கூட தமது பிறந்த தினத்தைக் கொண்டாடுவதை வன்னிமக்களின் துயரைக் கண்டு தவிர்த்துள்ள இவ்வேளையில் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை பற்றியும், சுதந்திர வாழ்வு பற்றியும் பிரகடனம் செய்த யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தமது சகபாடிகளை வழியனுப்பும் விருந்துபசாரங்களை அமைதியான முறையில் நடத்தலாமே என்ற ஆதங்கமே அனைவரிடமும் மேலேழுந்துள்ளது.

ஏனெனில், மக்களின் துயரைக் கண்டும் அதனைக் காணாததுபோல் பல்கலைக்கழக மாணவர்களினால் நடத்தப்படும் இந்தக் களியாட்டங்களை ஆவணப்படுத்தி, ''விடுதலைப் போராட்டத்தை யாழ். பல்கலைக்கழக சமூகம் நிராகரித்துவிட்டது'' என்ற மாயையை சர்வதேசத்தின் முன் பேரினவாத அரசு முன்வைத்துவிடக் கூடும். அதற்கு இனியும் இடம் கொடாமல் விழித்தெழவேண்டியது பல்கலைக்கழக மாணவர்களின் தலையாய கடமையாகும். *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர் பிரச்சினை குறித்த சந்திப்பு: கருணாநிதிக்கு மன்மோகன் சிங் கடிதம்

## டிசெ. 4இல் சர்வகட்சிக் குழு டில்லி விரைவது உறுதி





சென்னை, டிசெ.01

ஈழத்தமிழர் பிரச்சினை தொடர்பாக தமிழக முதல்வர் கருணாநிதி தலைமையிலான அனைத்துக் கட்சிக் குழுவினர் வரும் 4ஆம் திகதி டில்லி சென்று பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்துப் பேசுவது உறுதி என்றும் - இதுகுறித்து பிரதமர் மன்மோகன் சிங் தமிழக முதல்வர் கருணாநிதிக்கு கடிதம் எழுதியுள்ளார் என்றும் தமிழக அரசு வெளியிட்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப் பட்டவை வருமாறு-

இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் தமிழக முதல்வர் கருணாநிதிக்கு கடந்த சனிக்கிழமை எழுதியுள்ள கடிதத்தில்-

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து 25.11.2008 திகதியிட்டு முதல்வர் எழுதிய கடிதம் கிடைத்தது எனவும், 4.12.2008 அன்று காலை 10.15 மணியளவில் தமிழக முதல்வர் கருணாநிதி தலைமையில் வருகை தரும் அனைத்துக் கட்சி தலைவர்களின் குழுவினை அவரது அலுவலகத்தில் சந்தித்துப் பேசுவது எனவும் தெரிவித்துள்ளார்.

இதுதவிர, தமிழக அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தப் பிரச்சினை பற்றி 2.12.2008இல் (நாளை) பிரதமரைச் சந்தித்துக் கோரிக்கை வைப்பது என ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி அதற்கான நேரம் காலையா, மாலையா என்பது பிரதமரின் அலுவலகத்திலிருந்து தெரிந்தவுடன் அறிவிக்கப்படும் - என்றுள்ளது.

அனைவராலும் எதிர்பார்க்கப்பட்ட கார்த்திகை 27 மாவீரர் தின உரையில் புலிகளின் தலைவர் பிரபாகரன், இந்தியப் பேரரசுடனான உறவைப் புதுப்பிக்க அழைப்பு விடுத்துள்ளதுடன், தமிழகத் தலைவர்களுக்கும் மத்திய அரசுக்கும் தமது அன்பையும் நன்றியையும் தெரிவித்துள்ள நிலையில் -

முக்கியத்துவம் வாய்ந்த இந்தச் சந்திப்பு தமிழ்மக்கள்மத்தியில் பெரும் எதிர்பார்ப்பையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## புதுடில்லி செல்லும் குழுவில் ச.ம.கட்சி சார்பில் ராதிகா



சென்னை, டிசெ.1

ஈழத் தமிழர் பிரச்சினைக்காக பிரதமரைச் சந்திக்கச் செல்லும் அனைத்துக் கட்சிக் குழுவில் அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி சார்பில் ராதிகா சரத்குமார் பங்கேற்பார் என்று சமத்துவ மக்கள் கட்சி அறிவித்துள்ளது.

இதுகுறித்து அக்கட்சியின் பொதுச் செயலாளர் கரு. நாகராஜன் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

ஈழத் தமிழர் பிரச்சினைகளுக்காக ஒருமித்த உணர்வோடு அனைத்துக் கட்சிகளும் போராட வேண்டும் என எங்கள் கட்சி வலியுறுத்தி வருகிறது. அந்த வகையில் முதல்வர் கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்திலும், மனிதச் சங்கிலி போராட்டத்திலும் பங்கேற்றோம்.

இந்நிலையில் இலங்கைப் பிரச்சினைக்கு தீர்வு காணக் கோரி தமிழகத்தின் அனைத்துக் கட்சித் தலைவர்கள் வரும் 4ஆம் திகதி பிரதமரைச் சந்தித்து வலியுறுத்தவுள்ளனர்.

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் தலைவர் சரத்குமார் தற்போது வெளிநாட்டில் இருப்பதால், அவர் சார்பாக ராதிகா சரத்குமார் அனைத்துக் கட்சிக் குழுவில் பங்கேற்கிறார் - என்றுள்ளது.

# மழை—வெள்ளத்தால் 103 பேர் பலி!

## நிவாரணப் பணிக்காக 2009 மையங்கள்; கருணாநிதி தெரிவிப்பு

சென்னை, டிசெ. 1

தமிழகத்தில் மழை, வெள்ளத்தால் இது வரை 103 பேர் உயிரிழந்துள்ளதுடன், 5 லட்சத்து 52 ஆயிரத்து 290 ஹெக்டயர் பயிர்கள் நாசமாகியுள்ளன என்றும் நிவாரணப் பணிகள் துரிதமாக நடைபெறுகின்றன என்றும் முதல்வர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து நேற்றுமுன்தினம் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருப்பவை வருமாறு-

இதுவரை வந்துள்ள தகவலின்படி, மழை வெள்ளத்தால் உயிரிழந்தோர் தொகை 103. இறந்த கால்நடைகளின் எண்ணிக்கை 450. பாதிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 50 ஆயிரத்து 890. மேலும், 6,700 கிலோ மீற்றர் நீள வீதிகள் பழுதடைந்தும், 687 பாலங்கள், 402 அரசு கட்டடங்கள் சேதமடைந்துமுள்ளன. 328 ஏரிகள் உடைந்துள்ளன. 5 லட்சத்து 52,290 ஹெக்டயர் நிலத்தில் பயிர்கள் நாசமாகி, அதனால் 7 லட்சம் விவசாயிகள் பரிதவிக்கின்றனர்.

அநாதரவாக மக்கள் நிற்கக் கூடாது என நிவாரண உதவிகளை நிமிட நேரம் கூட தாமதிக்காமல் போய்ச் சேர்ந்திட தலைமைச் செயலாளரில் இருந்து கிராம அளவிலுள்ள அதிகாரிகள் வரை அரும்பாடுபட்டு வருகிறார்கள்.



சேலம் மாவட்டத்தில் சிறுமி ஒருத்தி வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டாள். தீயணைப்பு வீரர்கள் 2 மணிநேரப் போராட்டத்துக்குப் பின்னர் சிறுமியை மீட்டு வருகின்றபோது......

இதுவரை 2009 நிவாரண மையங்கள் திறக்கப்பட்டு, 10 லட்சத்து 19,400 பேர் தங்க வைக்கப்பட்டு, உணவு, மருத்துவ வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. வீடு, உடைமைகளை இழந்தவர்களுக்கு தலா ரூ.2 ஆயிரம் வீதம் நிதி உதவி வழங்கும் பணி தொடங்கி, ஒரே நாளில் ரூ.75 லட்சம் வரை வழங்கப்பட்டுள்ளது.

முழு தகவலும் வருவதற்கு முன் அவசர உதவிக்காக ரூ.100 கோடி நிவாரண நிதியாக அறிவித்து, இழப்பை ஈடுசெய்ய முயற்சி மேற்கொண்டுள்ளோம். முழுத்தேவை என்ன, முழுப்பாதிப்பு எவ்வளவு என்று கணக்கிட மத்திய அரசு அனுப்பும் குழுவிடம் முறையிட்டு உதவி பெற நடவடிக்கை எடுத்துள்ளோம்.

தோழமைக் கட்சியினரும், தோழமையில் லாத அணியினரும், மேலும் தீவிரம் தேவை, மேலும் நிவாரண உதவி வேண்டும் என்று அதிருப்திக் குரல் கொடுப்பதைக் கூட ஆதரவுக் குரலாக கருதி இன்னும் உழைத்திட ஊக்கம் பெறுகிறோம்.

அத்தகைய நல்ல மனங்களுக்கு மத்தியில், நச்சு நினைவுடன் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா வேண்டுமென்றே திட்டமிட்டு நம் மீது பெரும் பழி சுமத்திட, நிவாரணப் பணிகள் எதுவுமே செய்யவில்லை என்று நிந்தனை செய்யத் தொடங்கியுள்ளார். தம்பி முரசொலி மாறன் உடல், கோபாலபுரம் வீட்டில் வைக்கப்பட்டிருந்த போது அடுத்த தெருவில் ஜெயலலிதா வீட்டார் பட்டாசு கொளுத்தி வெடித்த சப்தத்தை அனைவரும் கேட்டார்களே.

அதுபோலத்தான், இப்போது மழை வெள்ள பாதிப்புக்குள்ளான மக்கள் துயர் துடைத்திட நாம் துடித்து தொண்டாற்றும்போது, ஜெயலலிதா மட்டும் இந்த அரசை நிவாரண உதவியே செய்யவில்லை என்று மகா புளுகு புளுகுகிறார் - என்றுள்ளது.

## இந்தியச் செய்திகள்

### மும்பைத் தாக்குதலுக்கு தார்மீகப் பொறுப்பேற்று

# பதவி விலகினார் சிவராஜ் பட்டீல்!

## புதிய உள்துறை அமைச்சராக சிதம்பரம்



சிவராஜ்



சிதம்பரம்

புதுடில்லி, டிசெ.01

மும்பையில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலுக்குத் தார்மீகப் பொறுப்பேற்று, மத்திய உள்துறை அமைச்சர் பதவியிலிருந்து சிவராஜ் பட்டீல் நேற்று ராஜினாமா செய்துள்ளார்.

தனது பதவி விலகல் கடிதத்தை அவர் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு அனுப்பிவைத்தார்.

அவரது ராஜினாமா ஏற்றுக்கொள்ளப்பட்டதையடுத்து மத்திய நிதியமைச்சராக பதவி வகித்த சிதம்பரம் புதிய உள்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் பதவிவகித்துவந்த நிதியமைச்சுப் பொறுப்பை பிரதமர் மன்மோகன் சிங் கவனித்து வருவார் எத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இதுகுறித்த விவரங்கள் வருமாறு-

நாட்டின் பல்வேறு முக்கிய நகரங்களில் கடந்த சில மாதங்களாக அடுத்தடுத்து பயங்கரவாதத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஜெய்ப்பூர், பெங்களூர், அகமதாபாத் மற்றும் டில்லி ஆகிய நகரங்களில் தொடர் வெடிகுண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இந்தத் தாக்குதல்களில் 20 பொலிஸார் மற்றும் 22 வெளிநாட்டவர் உட்பட 200 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து மத்திய உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டீல் பதவி விலகவேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது.

இந்த நிலையில் கடந்த புதன்கிழமை இரவு கடல் மார்க்கமாக மும்பைக்கு வந்த பாகிஸ்தான் பயங்கரவாதிகள் பல்வேறு இடங்களுக்குள் நுழைந்து கொலைவெறித் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து நாட்டின் உள்நாட்டு பாதுகாப்பில் போதிய கவனம் செலுத்தவில்லை என்று மத்திய உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டீல் மீது குற்றச்சாட்டு எழுந்தது - எதிர்ப்பு அதிகரித்தது.

நேற்றுமுன்தினம் டில்லியில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சியின் காரிய கமிட்டிக் கூட்டத்தில் மும்பை தாக்குதல் சம்பவத்தை தொடர்ந்து சிவராஜ் பட்டீல் உள்துறை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்று பல்வேறு தலைவர்களும் வலியுறுத்தினர் எனத் தெரிகிறது.

இந்தக் கூட்டத்தில்கலந்து கொண்ட சிவராஜ் பட்டீல் தாம் பதவி விலகத் தயாராக இருக்கிறேன் எனக் கூறினார் எனவும் தெரிகிறது.

இந்த நிலையில் மும்பையில் நடைபெற்ற தாக்குதல் சம்பவத்திற்கு தார்மீகப் பொறுப்பேற்றுக் கொள்கிறேன் எனக் கூறி சிவராஜ் பாட்டீல் தனது உள்துறை அமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

தனது ராஜினாமா கடிதத்தை அவர் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு அனுப்பி வைத்துள்ளார்.

கடந்த 2004ஆம் ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் லாட்டூர் தொகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்த போதிலும் அனுபவம் பெற்ற தலைவர் என்பதற்காக அவர் மத்திய உள்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார். பின்னர் அவர் மாநிலங்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

74 வயதாகும் சிவராஜ் பட்டீல் 11ஆவது மக்களவையின் சபா நாயகராக கடந்த 1991 முதல் 96 வரை பதவி வகித்துள்ளார். அதற்கு முன் மஹாராஷ்டிர சட்டப் பேரவையின் சபாநாயகராகவும் அவர் பதவி வகித்துள்ளார்.

இந்திராகாந்தி அமைச்சரவையில் அவர் பாதுகாப்புத் துறை இணை அமைச்சராக நியமிக்கப்பட்டார். பின்னர் பல்வேறு துறைகளில் அவர் அமைச்சர் பொறுப்பு வகித்துள்ளார். ராஜீவ் காந்தி அமைச்சரவையிலும் அவர் மத்திய அமைச்சராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# முப்படைத் தலைவர்களுடன் பிரதமர் அவசர ஆலோசனை

## சிவராஜ் பட்டீலுக்கு அழைப்பில்லை

மும்பையில் நடந்த பயங்கரவாதிகளின் தாக்குதலை அடுத்து நாட்டுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்துகள் குறித்தும் அவற்றைத் தடுக்கும் வழிமுறைகள் குறித்தும் ஆலோசிக்க இராணுவத்தின் முப்படைத் தளபதிகளுடன் பிரதமர் மன்மோகன் சிங் ஆலோசனை நடத்தினார். உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டீல் இக் கூட்டத்துக்கு அழைக்கப்படவில்லை.

டில்லியில் சனிக்கிழமை நடந்த இந்த ஆலோசனைக் கூட்டம் இரண்டரை மணி நேரத்துக்கும் மேல் நீடித்தது.

முப்படைகளின் தளபதிகள், பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனி, செயலர் விஜய் சிங், மூத்த அதிகாரிகள், உள்துறை அமைச்சகச் செயலர் மதுகர் குப்தா, உள்நாட்டு பாதுகாப்புக்கான சிறப்புச் செயலர் எம்.எல். குமாவத் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

மும்பை, டில்லி, ஆமதாபாத், ஹைதராபாத், பெங்களூர், ஜெய்ப்பூர், வாராணசி ஆகிய இடங்களில் [illegible] தொடர் குண்டுவெடிப்புகள் நடப்பதும், அதையடுத்து உயர்நிலைக் கூட்டம் நடத்துவதும், ஒரு மாதத்துக்கு எச்சரிக்கையாக இருப்பதும், பிறகு மறந்துவிடுவதும் தொடர்கதையாகிவிட்டது குறித்து பிரதமர் மன்மோகன் சிங் இக் கூட்டத்தில் மனம் வெதும்பிப் பேசினார்.

உலக நாடுகளின் பார்வையில் இந்தியா கேலிப்பொருளாகி வருவது குறித்து அவர் கவலை தெரிவித்தார். மும்பையின் 3 பெரிய கட்டடங்களில் புகுந்துகொண்டு அட்டகாசம் செய்த விரல்விட்டு எண்ணக்கூடிய பயங்கரவாதிகளை அடக்க முடியாமல் 60 மணி நேரத்துக்கும் மேல் போராட வேண்டிய நிலைமை குறித்தும் அவர் வேதனை தெரிவித்தார்.

பயங்கரவாதிகளின் இத்தகைய திடீர் தாக்குதல்களை ஒரேயடியாகத் தடுத்து நிறுத்த வகுக்க வேண்டிய உத்திகள், வாங்க வேண்டிய நவீன சாதனங்கள், இயற்ற வேண்டிய சட்டங்கள் ஆகியவை குறித்து ஓரளவுக்கு அரசு சிந்திக்க ஆரம்பித்துவிட்டதையே இந்த ஆலோசனைக் கூட்டம் உணர்த்துகிறது.

சிவராஜ் பாட்டீலுக்கு அழைப்பு அனுப்பப்படாததால் அவர் கலந்து கொள்ளவில்லை. ஆனால் இந்தக் கூட்டத்துக்கும் முன்னதாக அவர் உள்துறை அமைச்சகத்தின் மூத்த அதிகாரிகளை அழைத்து ஆலோசனைக் கூட்டம் நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



மானிப்பாய் பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்

**சபாபதி கந்தசாமி**

அவர்களின் சிவபதம் எய்திய செய்தி அறிந்து அதிர்ச்சியடைகின்றோம். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்சபை, பொது முகாமையாளர், பணியாளர்கள்,
யாழ்ப்பாணம் பல நோ.கூ.சங்கம், யாழ்ப்பாணம்.

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 11 09 1936



தேகவியோகம் 24 11 2006

**திருமதி லயன் சோமேஸ்வரி கைலாசநாதன்**

(யா/இராமநாதன் கல்லூரி-மாணவி, ஆசிரியர், அதிபர்)
திதி: சதுர்த்தி(01.12.2008)

அவர் தம் சேவையில் திருவாகி நற்பிரஜைகளாக மிளிர்கின்ற மாணவச் செல்வங்களும், அவரின் அன்பில் திளைத்த நல் உள்ளங்களும்-நினைவு கூருகின்றோம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 16 07 1937



ஆண்டவன் அடியில் 01 11 2008

**அமரர் கந்தையா மயில்வாகனம்** (பொன்னுத்துரை)

வடமராட்சி கிழக்கு, நாகர்கோவிலைப் பிறப்பிடமாகவும் குடத்தனையை வசிப்பிடமாகவும் கொண்ட எமது அன்புத் தந்தையின் மறைவின் ஆறாத்துயர் செய்தியினை அறிந்து இல்லம் நாடி வந்து துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் ஆறுதல் கூறியவர்களுக்கும் உள்ளூர், வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி மூலமாகவும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலம் அனுதாபத்தைத் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் உடல், உளரீதியாக உதவிய உள்ளங்களான உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பம் சார்பான நெஞ்சில் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்று (01.12.2008) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

குடத்தனை கிழக்கு, குடத்தனை.
060-2213476

தகவல்
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27 ★ 03 ★ 1949



மறைவு 13 ★ 12 ★ 2007

புன்னாலைக் கட்டுவனைப் பிறப்பிடமாகவும் வல்வெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் தர்மலிங்கம் சிறீஸ்கந்தராசா**

திதி: சதுர்த்தி (01.12.2008)

அன்பினால் எம்மை ஆண்டு, உலக
அனுபவம் எல்லாம் நல்கி, நன்று
நாம் சிறக்க வைத்தீர்! என்றும்
விண்ணிலே இருந்து தாரீர்! நிறைமதி
ஆசிகள், என்றும் இறைஞ்சுவோம்
இறைவன் தாளே!

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

பாமன் தோட்டம்,
வல்வெட்டி.

(50355)

அன்பு மனைவி, மகன்,
குடும்பத்தினர்.

## திறப்புவிழா நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.1

நவீன கற்பித்தல் முறைகளை உள்வாங்கி அவர்களின் ஆளுமையினை விருத்தி செய்வதற்காக மழலைகள் கல்வியகம் என்ற நிறுவனம் இன்று திங்கட்கிழமை காலை ஆரம்பிக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதிக்கு அண்மையில் திறக்கப்படவுள்ள இந்த நிறுவனத்தில் மகிழ்வூட்டலுடன் கூடிய கற்பித்தற் செயற்பாடுகள் இடம்பெறவுள்ளன.

(04-150)

## ஓராண்டு நினைவஞ்சலி





| அமரர் கோபாலசிங்கம் தனலட்சுமி (கொழும்புத்துறை) | | அமரர் மாரிமுத்து பரமேஸ்வரி (சுழிபுரம்) |
|---|---|---|
| 27.08.1946 | மண்ணில் | 19.02.1946 |
| 14.11.2007 | விண்ணில் | 13.12.2007 |
| பஞ்சமி (03.11.2008) | திதி | சதுர்த்தி (01.12.2008) |

இரு வீட்டின் தலைவியாராய் இருந்து நீங்கள்
ஒரு வீட்டின் ஒளி விளக்காய் மாறிப் பின்னர்
திருவீட்டில் உறைவதற்கோ திங்கள் ஒன்றில்
உருவிட்டு அருவானீர் ஓராண்டில் சொல்வீர்.

எமது குடும்பத் தலைவியரின் ஆத்மாக்கள் சாந்தி கொள்ளப் பிரார்த்திக்கும்:

குடும்பத்தினர்.
இல.20, 4ஆம் குறுக்கு,
கொழும்புத்துறை.

(80375)

குடும்பத்தினர்.
சுழிபுரம் மத்தி,
சுழிபுரம்.

# மரண அறிவித்தல்கள்

## மயில்வாகனம் தருமராசா



சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும், கரம்பொன் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்டு தற்பொழுது பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கில் வசித்தவருமாகிய ம.தருமராசா 29.11.2008 சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையாகி விட்டார்.

அன்னார் அமரர்களான மயில்வாகனம் - கனகாம்பிகை தம்பதியரின் புத்திரரும் அமரர்களான பொன்னம்பலம்-இராசம்மா தம்பதியரின் மருமகனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும் லோகேஸ்வரி (கொழும்பு), காலஞ்சென்ற தவராசா (மட்டக்களப்பு) மற்றும் கந்தசாமி (ஓய்வுபெற்ற அதிபர், யா/தம்பாட்டி அ.த.க.பாடசாலை), காலஞ்சென்றவர்களான இந்திராணி, தயாபரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் நாகராசா (நர்மதா கோல்ட் சென்ரர், கொழும்பு), தங்கம்மா (மட்டக்களப்பு), செல்வநாயகி (ஓய்வு பெற்ற உப அதிபர், வேலணை மேற்கு, நடராஜா வித்தியாசாலை), சுபாசினி (லண்டன்), சற்குணம் ரதிராணி (கனடா), அருணோதயன் (கனடா), புஸ்பகாந்தன் இந்திராணி (கட்டைப்பிராய்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (01.12.2008) திங்கள் மு.ப. 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கல்வாரி பூரண சுவிசேஷ சேமக்காலையில் (தாவடி) அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பொற்பதி வீதி,
2ஆம் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல்:
புஷ்பராணி (மனைவி),
கந்தசாமி (சகோதரன்).

(80372)

## திருமதி கனகம்மா சந்திரலிங்கம் (மல்லிஅக்கா)



சீ.சீ.ரி.எம். ஒழுங்கை, கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா சந்திரலிங்கம் நேற்று (30.11.2008) காலமானார்.

அன்னார் சந்திரலிங்கத்தின் அன்பு மனைவியும், சந்திரவதனா (N.S.Bவங்கி, மானிப்பாய்), சந்திரலதா (கனடா), சந்திரசேகர் (வேலணை மத்திய கல்லூரி), சந்திரதாசன் (லண்டன்), சந்திரரூபன் (ஜேர்மனி), சந்திரகாந்தன் (யாழ். நீதிமன்றம்), சந்திரதீபன் (யாழ்.நீதிமன்றம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கெங்காதரன் (உதவி முகாமையாளர், தேசிய சேமிப்பு அஞ்சல் வங்கி, நாவலர் வீதி ), ராஜ்குமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (1.12.2008) திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சீ.சீ.ரி.எம்.வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
இ.சந்திரலிங்கம் (கணவர்-பிஸ்கால்),
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவின் மின்சார வசதிக்கென நாகபூஷணி ஆலயத்தினர் நிதியுதவி

யாழ்ப்பாணம், டிசெ.1

நயினாதீவுப் பிரதேசத்தின் மின்சார வசதியை மேம்படுத்தவென நாகபூஷணி அம்பாள் ஆலய அறங்காவலர் சபையினர் 8 லட்சத் 38 ஆயிரத்து 800 ரூபாவை அன்புளிப்புச் செய்துள்ளனர்.

நயினாதீவு சமூக, பொருளாதார, கல்வி, கலாசார அபிவிருத்திச் சங்கத்தின் கூட்டம் அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தலைமை உரை நிகழ்த்திய சங்கத்தின் தலைவர் ப.க.பரமலிங்கம் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெவித்தவை வருமாறு:-

எமது சங்கம் நயினாதீவில் சுமார் 60 லட்சம் ரூபா பெறுமதியான வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

தற்போது எமது பிரதேசத்தில் உள்ள பாரிய பிரச்சினைகளான நன்னீர் பற்றாக்குறை, கடலரிப்பின் தாக்கம் என்பவை உடனடியாக நிவர்த்தி செய்யப்படவேண்டியவை. இதற்கு நயினாதீவு மக்களினதும் வெளிநாட்டு நிறுவனங்களினதும் பேராதரவும் ஒத்துழைப்பும் தேவை - என்றார். (202)

மலிவு மலிவு

அநேகரின் வேண்டுகோளுக்கு
இணங்க நத்தார், புதுவருடத்தை
முன்னிட்டு சகல துணி வகைகளும்
மிகக் குறைந்த விலையில், சகல ரெடிமெட்
ஆடைகளும் மேலதிக விசேட கழிவுடனும்
பெற்றுக்கொள்ள 01.12.2008 தொடக்கம்
31.12.2008 வரை விரையுங்கள்!

(f-555805)

**லைடன் புடைவை நிலையம்**

410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (பஸ் நிலையம் முன்பாக)

## கண்ணீர் அஞ்சலி



மானிப்பாய் பரிஷ் பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கத் தலைவர்

### சபாபதி கந்தசாமி

அவர்கள் சிவபதம் எய்திய செய்தி அறிந்து அதிர்ச்சி அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாண மாவட்ட
விவசாய நுகர்ச்சிக்
கூட்டுறவுச்
சங்கங்களின் சமாசம்.

தலைவர், பணிப்பாளர் சபை,
பொதுமுகாமையாளர், பணியாளர்கள்.

(f-555806)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
27 - 10 - 1978



மறைவு
01 - 11 - 2008

*கடந்த 01.11.2008 சனிக்கிழமை சிவபதமடைந்த*
*எங்கள் குடும்பத்தின் தெய்வமகன்*

### அமரர் ஐயாத்துரை ஞானச்சந்திரன் (ஞானம்)

*அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று(01.12.2008) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

ஐ.சந்திரன்
ஆனந்தா வீதி,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.

(80365)

## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண் மகிழ
07 - 07 - 1946



மண் நெகிழ
01 - 12 - 1997

### அமரர் சீனியர் இராசரத்தினம் (நிற்சாமம், சங்கானை)

மனைவியென்றும் மக்கள் என்றும்
உற்றார், உறவினர், நண்பர்கள் என்றும்
நன்மை, தீமைகள் நாலும் பார்த்தவன்
இன்று இம் மண்ணில் நீயில்லை
பதினொரு ஆண்டுகள் பறந்தோடி விட்டன
பதிவிரதை எம் தாயும் பரிதவித்து கதறியழ
பண்பான புத்திரர் பாசத்தால் ஏக்கமுற
பரிதவிக்க விட்டு பதினொரு ஆண்டுகள்
பறந்தோடி விட்டனவே
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
நித்தமும் நினைக்கின்றோம் - நின்
ஆத்ம சாந்திக்காக.

(80176)

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*நிற்சாமம்,*
*சங்கானை.*

தகவல்,
இராசரத்தினம் மோகன் (மகன் -சுவிஸ்).

## தொண்டர் ஆசிரியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,டிசெ.1

தொண்டர் ஆசிரியர் நிரந்தர நியமனம் தொடர்பான விசேட கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் உள்ள புதிய உயர்கல்லூரி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது என்று யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது. (1)

## கோதுமை மாவை பெறுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,டிசெ. 1

கோண்டாவில் களஞ்சியத்தில் இருந்து இதுவரை கோதுமை மாவை பெறாத பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை, அதனை இன்று காலை பெற்றுக்கொள்ளுமாறு அரச அதி பர் கே.கணேஷ் கேட்டுள்ளார்.

செயலகத்தில் வழங்கற்கட்டளைகளைப் பெற்றுக்கொண்ட சங்கங்களுக்கே இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (1)

## தென்மராட்சியில் இன்று ஆண்டிறுதிப்பரீட்சை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,டிச. 1

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆண்டிறுதிப்பரீட்சைகள் இன்று ஆரம்பமாகும் என வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.

ஆரம்பப்பிரிவு தரம் 6, 7, 8, 10 ஆகிய வகுப்புகளுக்கான திருத்தியமைக்கப்பட்ட நேரசூசிகள் அந்தந்தக் கொத்தணி பாடசாலைகளின் அதிபர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் கொத்தணிக்கு உட்பட்ட பாடசாலைகளில் அதிபர்கள் நேரசூசியினைப் பெற்றுக்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(1-207)

## யாழ். நகரம், நாவாந்துறை குடிதண்ணீர் விநியோகம் நேற்று முதல் தடை

யாழ்ப்பாணம், டிசெ.1

யாழ். பிரதான வீதியில் மடத்தடிச் சந்தியில் பிரதான குடிதண்ணீர் விநியோகக் குழாய் சேதமடைந்துள்ளதால் யாழ். நகரம் மற்றும் நாவாந்துறைப் பகுதிகளுக்கான விநியோகம் தடைப்பட்டுள்ளது.

திருத்தவேலைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்று முதல் மறுஅறிவித்தல் வரை விநியோகம் தடைப்பட்டிருக்கும் என மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ தெரிவித்தார்.

(1)

## கிளிநொச்சி நோக்கிய...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது கிளிநொச்சியிலிருந்து புலிகள் பின்வாங்கிச் செல்கிறார்கள் என்ற எண்ணத்தை அரச வட்டாரங்களில் ஏற்படுத்தியிருந்தது. ஆனால் அவர்கள் தம் நிலைகளை மாற்றி அமைத்து தாக்குதலில் ஈடுபடுகிறார்கள் என்பது தெரிய வந்துள்ளது. 57ஆவது இராணுவப்பிரிவு அக்கராயனிலிருந்து வட திசையில் நகர்ந்து கிளிநொச்சி நகருக்கு நான்கு கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கின்றது. நகரின் எல்லைக்கு சிறு தூரமே இருப்பதாகக் கூறப்படுகின்றது. செயல் அணி - 1, பூநகரி - கிளிநொச்சி பாதையில் நகர்ந்து நகரிலிருந்து 8 கி.மீ தூரத்தில் உள்ளது. செயல் அணி - 3 மாங்குளத்திலிருந்து கிழக்காக நகர்ந்து ஒலுமடுவை இவ்வாரம் கைப்பற்றியுள்ளது. 59 படையணியினா [illegible] வட திசையில் இந்த அணி நகர்கின்றது. (ப)

## நல் வாழ்த்துகள்



வாழ்வகத்தின் தலைவரும், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளருமான

**திரு.ஆறுமுகம் ரவீந்திரன் (B.A,M.Ed.)**

அவர்கள் இன்று டிசெம்பர் முதலாம் திகதியிலிருந்து, இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவைக்கு (S.L.T.E.S) உள்வாங்கப்பட்டிருப்பதை முன்னிட்டு வாழ்வகச் சமூகம் பெருமையடைவதுடன் அவரின் சேவை மேலும் மேன்மையுற நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றது.

சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம்.

வாழ்வக சமூகம்.

## கண்ணீர் அஞ்சலி



யாழ். சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி ஓய்வு பெற்ற பிரதி அதிபரும் மானிப்பாய் பரிஷ் பல நோ. கூ. சங்கத் தலைவரும் மற்றும் சமூக சேவையாளருமான

### சபாபதி கந்தசாமி

அவர்கள் காலமான செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சண்டிலிப்பாய்.
(80371)

க.இராசரத்தினம் குடும்பத்தினர்.
ஓய்வுபெற்ற கணக்காளர். M.P.C.S மானிப்பாய்

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நகுலாம்பிகை சிவப்பிரகாசம்



வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நகுலாம்பிகை சிவப்பிரகாசம் 29.11.2008 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சிவப்பிரகாசத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - பார்வதி தம்பதியரின் அன்பு மகளும் மோ.கனேஸ்வரி, நகுலேஸ்வரி (லண்டன்), காந்தரூபன் (சுவிஸ்), சிவம் (காலி), Dr.ராதா (யாழ்.போதனா வைத்தி யசாலை) ஆகியோரின் அன்புத் தாயும் கேதீஸ்வரன், சிறிமுருகானந்தன், தயாநிதி, சந்திராதேவி ஆகியோரின் மாமியும் பிரியா, துளசி, கீதா, டிலோசன், டிலக்ஷன், லக்ஷி, பிரதீஷா, ஆதித், அட்சயா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(01.12.2008) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று,பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் ஒரு மணிக்கு சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேலணை மேற்கு,
வேலணை

தகவல்:
சிவம்(மகன்).

### திருமதி செல்வராணி குமாரசுவாமி

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராணி குமாரசுவாமி அவர்கள் நேற்று (30.11.2008) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - காந்திமதியம்மை தம்பதியரின் மகளும் செல்லப்பா - வள்ளியம்மைப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் இளைப்பாறிய ஆய்வுகூட பரிசோதகர் (M.L.T.) செ.குமாரசுவாமின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(01.12.2008) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முள்ளானை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்தாவத்தை,
இளவாலை.

(80377)

தகவல்:
பி.தர்மபாலா,
எஸ்.ஜெயதாசன்.

### நாகமுத்து நாகலிங்கம்



அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும கொண்ட நாகமுத்து நாகலிங்கம் 24.11.2008 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து - தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் இரத்தினத்தின் அன்புக் கணவரும் றோசம்மா, முத்துமாலை, அமரர் பாலமுத்து ஆகியோரின் சகோதரரும் கோகுலராணி, விஜயராசா (லண்டன்), தவகுலராணி,பத்மராசா(பெற்றோலியக் கூட்டுத்தாபனம், கே.கே.எஸ்), நாகராசா(லண்டன்) ஆகியோரின் தந்தையும் ஜெயகுலரதி(லண்டன்), அன்னலிங்கம், குகனேஸ்வரி, விஜிதா(லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனும் சிந்துஜன், மிதுஷா, சர்ஜன்,மிருஷிகா(லண்டன்), சுதுமில்சன், அனோஷ், அடெம்சிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(01.12.2008) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தன்தாளை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி தெற்கு,
அராலி.

(80363)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 தொண்டு நிறுவனங்களை வெளியேற்ற அரச முடிவு

## சட்ட ஒழுங்குகளைப் பின்பற்றவில்லையாம்

கொழும்பு, டிசெ.1

இலங்கையில் தமது மனிதாபிமா னப் பணிகளை சிறப்பாக மேற்கொள்ளாதமைக் காகவும் அரசின் சட்ட ஒழுங்கு முறைக ளைச் சரியாகப் பின்பற்றாதமைக்காகவும் மூன்று சர்வதேச அரச சார்பற்ற அமைப் புகளை நாட்டிலிருந்து வெளியேற்ற அரசு முடிவு செய்திருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.

நோர்வேயைச் சேர்ந்த 'நோர்வேஜியன் பீப்பிள் எய்ட்', 'போரூட்' ஆகிய அரச சார் பற்ற அமைப்புகளும் நெதர் லாந்தின் 'சோவா' (ZOA) நிறுவனமும் வெளியேற்றப்ப டலாம் எனத் தெரிகின்றது.

மூன்று அரச சார்பற்ற அமைப்புக ளும் தமது பணிகளை மோசமான முறையில் முன்னெடுத்துள்ளமை விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளதாகவும், இத னால், அவர்களது நடவடிக்கைகளை இடை நிறுத்து மாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது எனவும் அரசின் மூத்த அதிகாரியொ ருவர் குறிப்பிட்டுள்ளார்.

வன்னியிலிருந்து வெளியேற்றப் பட்ட பின்னர் வவுனியாவில் தமது அலுவலகங் களை அமைத்துள்ள இந்த அரச சார்பற்ற அமைப்புகள் தற்போது எப்பணியையும் முன்னெடுப்பதில்லை என அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டார்.

இதில் குறிப்பிட்ட அரச சார்பற்ற அமைப்பொன்று விடுதலைப் புலிகளுக் குச் சார்பாக செயற்பட்டமைக்கான தடயங் கள் உள்ளன எனவும் அந்த அதிகாரி தெரி வித்துள்ளார்.

இந்த அமைப்பு விடுதலைப் புலிகள் தமது பதுங்குகுழிகளை அமைப்பதற்கு இயந்திரங்களை வழங்கியுள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இதேவேளை -

மனிதாபிமான ஏஜென்சிகளின் இணை யத்தின் பிரதி இயக்குநர், அரசாங்கத்தின் முடிவு குறித்து தமக்கு இதுவரை தகவல் எதுவுமில்லை என்றும் -

குறிப்பிட்ட பல செயல்முறைகளின் பின்னரே மனிதாபிமானத் தொண்டர் நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் - தெரிவித்தார்.

குறிப்பிட்ட மூன்று சர்வதேச தொண்டு நிறுவனங்களில்ஒன்று சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களில் ஒன்று நாடாளு மன்றத் தெரிவுக்குழு விசாரணையின் போது அது சந்தேகத்துக்கு இடமானமுறையில் பணியாற்றியதாகக் கண்டறியப்பட்டது என்று தெரிவுக்குழுவின் தலைவர் விஜித ஹேரத் கூறினார். (அ)

### மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகப்பேச்சாளர்சிரேஷ்டபொலிஸ்அத்தியட் சகர் ரஞ்சித் குணசேகர தெரிவித்துள்ளார்.

பொலிஸ் ஊரடங்கு விடுக்கப்பட்ட நிலையிலேயே இவர்கள் கைதுசெய்யப் பட்டிருந்தனர்.

இந்தச் சோதனை நடவடிக்கையின் போது 4 ஆயிரத்திற்கும் அதிகமான வீடுக ளும், 10 ஆயிரத்துக்கும் அதிகமான நபர்க ளும் சோதனையிடப்பட்டனர் என்று தெரி விக்கப்பட்டது.

விடுவிக்கப்படாத சந்தேக நபர்கள் தொடர்ந்தும், தடுத்து வைக்கப்பட்டு, விசாரணைக்குட்படுத்தப்பட்டு வரு கின்றனர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச் சாளர் கூறினார். (அ-சி)

### வெள்ளத்தால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை -

கச்சாய்ப் பகுதி கரையோர காவலரண் களில் கடமையிலிருந்த படையினர் சிலரையும் காணவில்லை என்று சொல் லப்படுகின்றது.

கடந்த மாதம் 26 ஆம்திகதியன்று திடீ ரென வெள்ளம் கடலேரியில் ஏற்பட்டதால் கடமைக்குச் சென்ற 27 பேரில் பலர் காலையில் முகாமுக்குத் திரும்பவில்லை என்று சொல்லப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து கடலில் பட குகளில் தேடுதல் நடத்தப்பட்டதாகவும் அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்பட்டது.

மேலும்அப் பகுதியில் கரையோரத்தில் இருந்த காவலரண்கள் பல மோசமாக சேத மடைந்துள்ளதாகவும் சொல்லப்படுகிறது. (அ-1-207)

### இந்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணனும் பதவி விலகினார். எனினும் அவரது பதவி விலகல் கடிதம் பிரதமரால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என நேற்று மாலை பிந்திக்கிடைத்த தக வல்கள் தெரிவித்தன.

இலங்கை விவகாரத்தில் மிகவும் அறி யப்பட்டவரான எம்.கே.நாராயணன் மிக வும் நீண்டகாலமாக இந்தியாவின் தேசி யப் பாதுகாப்பு ஆலோசகராகக் கடமை யாற்றி வந்தார்.

இறுதியாக, சமீபத்தில் கொழும்பில் நடந்த சார்க் மாநாட்டில் கலந்துகொள்வ தற்காக அவர் இலங்கைக்கு வந்து திரும்பி யிருந்தார். (அ-சி)

### இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆசிரியர்களும் ஒருங்கிணைந்து கடந்த சனியன்று தொடக்கம் நான்கு வாரங்க ளுக்குத் தொடர்ச்சியாக இந்தக் கொடிவார நிகழ்வை முன்னெடுத்துவருகின்றனர்.

இந்தச் செயற்பாடுகளுக்கென கல்விக் கழகத்தினால் விஷேடமாக கொடிவார அட்டை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அதில் தாயகத்தில் இடம்பெயர்ந்த உறவு கள் அனுபவிக்கும் துன்பங்கள் குறித்த வாசகங்கள் தமிழ் மற்றும் ஜேர்மன் மொழிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

குறிப்பாக தாயகத்தில் தமிழ் மாணவ சமூகம் அனுபவித்துவரும் துயரங்களை தாம் பயிலும் ஜேர்மனியப் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கும் சக மாணவர்களுக்கும் வெளிப்படுத்தும் செயற்பாடாகவே இந்த் நிகழ்வு நடத்தப்படுவதாக அறியப்படு கின்றது. (அ-சி)

### ஆறு இலங்கைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்னை நகரம் முழுவதும் நேற்றுமுன் தினம் இரவு, விடுதிகளில் தீவிர சோதனை நடத்தப்பட்டது. அதன்போதே 6 இலங் கையரும் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

இந்த சம்பவம் குறித்து கியூ பிரிவு மற்றும் உளவுப்பிரிவு பொலிஸாருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர்களும் 6 பேரிடமும் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர் என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (அ-சி)

### அலம்பிலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கும் இராணுவத்துக்கும் இடையில் நேற்றுக்காலைவரை கடும் மோதல் இடம்பெற்றது. மோதலை அடுத்து தேடு தல் மேற்கொண்ட படையினர் புலி உறுப் பினர்கள் மூவரின் சடலங்களையும், ஆயு தங்களையும் மீட்டனர்- என்றும் பாது காப்பு அமைச்சு மேலும் தெரிவித்தது.

இந்த மோதல் குறித்து விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து தகவல் எதுவும் வெளியாகவில்லை.

### வன்னியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் வடக்கில் நிலவும் அடைமழை மற்றும் வெள்ளப் பெருக்கு காரணமாக இராணுவத்தினர் மற்றும் அங்கு இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கான அத்தியாவ சிய உணவுப் பொருள்களின் விநியோக நடவடிக்கைகளுக்காகவே தடை ஏற் பட்டுள்ளது. படையினரின் இராணுவ முன்னெடுப்புக்களுக்கு எவ்விதத் தடங் கலும் ஏற்படவில்லை. இயற்கை அனர்த் தங்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய வகையில் அவர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன என்று இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் இராணுவ பேச்சாளர் மேலும் கூறியவை வருமாறு:-

யாழ்.குடா நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக இராணுவத்தி னரின் பதுங்கு குழிகள் மற்றும் முகாம்கள் போன்றவற்றில் வெள்ள நீர் தேங்கியுள் ளது. இதனல் அந்தவிடங்களில் தங்கியி ருந்த படையினர் ஏனைய இடங்களுக்குப் பாதுகாப்பாக இடம்பெயர்ந்துள்ளனர்-

வெள்ளம் காரணமாக வடக்கிற்கான போக்குவரத்து நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. அதனாலேயே இராணுவத்தினர் மற்றும் பொதுமக்களுக் கான விநியோக நடவடிக்கைகள் பாதிக் கப்பட்டுள்ளன. மழை வெள்ளத்திலும் இராணுவ முன்னெடுப்புக்களை மேற் கொண்டு வரும் படையினரின் கடும் தாக் குதல்கள் காரணமாக விடுதலைப் புலிக ளுக்கு பெரும் இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன-

வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுவதோடு அவற்றை நிறுத்துவது தொடர்பில் எவ்வித தீர்மான மும் எடுக்கப்படவில்லை - என்றார்.

இதேவேளை வடபகுதியில் கடந்த புதன்கிழமை ஏற்பட்ட கடுமையான கால நிலை சீர்கேட்டால் குடாநாட்டிலுள்ள படை யினருக்கு கடும் பாதிப்புக்கள் ஏற்பட் டுள் ளன என்று [illegible] தகவல்கள் தெரிவித்துள்ளன. (அ-சி)

### மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் பாதுகாப்பு நிலைவரம் மற்றும் அரசமைப்பின் 17 ஆவது திருத்தத்தின் கீழ் ஆணைக்குழுக்களை அமைத்தல் ஆகிய விடயங்களே உத்தேச சந்திப்பின் போது முக்கியமாக ஆராயப்படவிருக்கின்றன என்று அறியவந்துள்ளது.

ரோமாபுரிக்குச் சென்றுள்ள ஜனாதிபதி வார் இறுதியில் நாடு திரும்பியதும், இச் சந்திப்பு இடம்பெறும் என்று எதிர்பார்க் கப்படுகின்றது.

### மேஜர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜெனரல் வி.ஆர்.டி.சில்வா தலைமையிலான இராணுவ நீதிமன்றில் நிறுத்தப்பட விருக் கின்றார்.அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை இராணுவ நீதி மன்றம் இம்மாதம் 4ஆம், 5ஆம், 8ஆம் திகதிகள் விசாரிக்க விருக்கின்றது.

அதிகாரத்தையும், வளங்களையும் துஷ் பிரயோகம் செய்தமை உட்பட பல குற்றச் சாட்டுக்கள் அவர் மீது சுமத்தப்பட் டுள்ளன.

கடந்த வருடம் கிழக்கையும் தொப்பிக லவையும் படையினர் மீட்டபோது, மேஜர் ஜெனரல் பன்னிப்பிட்டிய கிழக்கின் கட் டளைத் தளபதியாக பணியாற்றி இருந்தார்.

### தமிழகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்நாட்டிற்கான சமீபத்தைய விஜயத் தின் போது எதிர்க்கட்சித்தலைவர் ரணில் பயணம் செய்த வாகனம் அரசியல் கட்சி களின் தொண்டர்களால் வழிமறிக்கப்பட்ட சம்பவம் குறித்து ஜனாதிபதி கேட்டறிந் துள்ளார்.

குறிப்பிட்ட வீதி மறியல் போராட் டத்தை யார் மேற்கொண்டார்கள்? மற்றும் எவ்வாறான கோஷங்கள் எழுப்பப்பட் டன? போன்ற விவரங்களை ஜனாதிபதி தொலைபேசி உரையாடலின் போது கேட் டறிந்துள்ளார்.

மேலும் முக்கியமாக, புதுடில்லியின் மனோநிலை எவ்வாறு உள்ளது? அரசியல் தலைவர்கள் எதனை வலியுறுத்தினர்? - எனவும் ஜனாதிபதி கேட்டுள்ளார். தமிழ் நாட்டில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து விவரமாக விளக்கமளித்துள்ள எதிர்க்கட் சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தமிழ் நாட்டில் இலங்கைத் தமிழர் ஆதரவு உணர் வலைகள் தீவிரமடைகின்றன எனவும் தமி ழக முதலமைச்சரால் கூட இதனைத் தடுத்து நிறுத்த முடியாதுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார் என அறியவந்துள்ளது.

அதேவேளை, தமிழ்நாட்டில் காணப்படு வது போல புதுடில்லியில் யுத்தநிறுத்தத் திற்கான அழுத்தங்கள் எவையும் காணப் படவில்லையென்று குறிப்பிட்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர், இலங்கை அரசு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் பேச வேண்டும் என வலியுறுத்தப் பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி வன்னியில் இடம் பெயர்ந்தவர் களின் பாதுகாப்புக் குறித்து அதிகம் வலியுறுத்தினார் எனவும் எதிர்க் கட் சித் தலைவர் தெரி வித்துள்ளார். (அ-சி)

### முறிகண்டிப் பகுதியில் ஹெலிகள் தாக்குதல்

கிளிநொச்சி மாவட்டம் அக்கராயன், முறி கண்டிப் பகுதி மீது நேற்றுக்காலை 7.30 மணி யளவில் விமானப்படையினரின் எம்.ஐ. 24 ரகக் ஹெலிக்கொப்டர்கள் தாக்குதல் நடத்தின.

அக்கராயனுக்கு மேற்கேயுள்ள முறிகண் டிப் பகுதியிலுள்ள விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது - அப்பகுதியை நோக்கி முன் னேறிச்செல்லும் படையினருக்கு உதவியா கவே - இத்தாக்குதல் நடத்தப்பட்டது என்று படைத்தரப்பில் கூறப்பட்டது. எனினும் இத் தாக்குதல் தொடர்பாக விடுதலைப் புலி கள் தரப்பிலிருந்து எந்தத் தகவல்களும் வெளியாகவில்லை.

### புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் ஜயரத்னவின் அலுவல கத்தினால் உத்தியோக பூர்வமாக நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையில் சந்திப்பு பற்றிய விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் களைந்தால், அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான அரசின் கதவு எப்போதும் திறந்திருக்கிறது.

இந்த நாட்டிலிருந்து பயங்கரவாதத்தை ஒழித்து, நிலையான சமாதானத்தைக் கொண்டுவரவேண்டும் என்ற ஆணையை எமது நாட்டு மக்கள் ஜனாதிபதிக்கு வழங்கி உள்ளனர் -

நாட்டில் நிலவும் பிரச்சினையை அரசி யல் தீர்வு ஒன்றின் மூலமே தீர்த்து வைக்க வேண்டும் என்பதில் மஹிந்த அரசு மிகவும் அக்கறையாக உள்ளது-

இப்போது நடைபெறும் இராணுவ நட வடிக்கைகள் பயங்கரவாதத்தை ஒழிக்கும் நோக்குடனேயே மேற்கொள்ளப்படுகின்றன-

- என்று அமைச்சர் ஜயரத்ன இந்தியா வின் பிரதித் தூதுவருடன் நடத்திய சந் திப்பின் போது கூறினார் என்று அமைச்சு அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

தமிழக முதல்வர் மு.கருணாநிதி தலை மையில் சர்வகட்சிப் பிரதிநிதிகள் புதுடில்லி சென்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை எதிர்வரும் 4ஆம் திகதி சந்தித்து போர் நிறுத்தம் கொண்டு வருமாறு இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்குமாறு கேட்க விருக்கின்றனர். இவ் வேளையில்- இலங்கை அரசு தமது நிலைப்பாட்டை இந்தியாவுக்கு முந்திக்கொண்டு தெரிவித்திருக்கிறது.

கடந்த 15 ஆம் திகதி பூநகரி மீட்கப்பட்ட வெற்றியைக் கொண்டாடும் வகையில் அரச தொலைக்காட்சியில் உரையாற்றிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ -

ஆயுதங்களை கீழே வைத்து விட்டு அரசுடன் பேச்சுக்களில் ஈடுபட முன்வர வேண்டும் என்று விடுதலைப் புலிகளின் தலை வர் வே.பிரபாகரனுக்கு வேண்டு கோள் ஒன்றை விடுத்திருந்தது தெரிந்ததே. (அ)

### மன்னாரை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிவான் க.அரியநாயகம் முன்னிலை யில் ஆஜர் செய்யப்பட்டனர்.

குருநகரில் உள்ள நலன்புரி நிலையத் தில் இவர்களைத் தங்க வைக்குமாறு நீதி வான் உத்தரவிட்டார். (அ-1-218)

### கைப்பற்றிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்திற்குப் புதிதாக 22,000 பேரும், கடற்படைக்கு 7,000, விமானப் படைக்கு 5,000, பொலிஸ் துறைக்கு 15,000 பேரும் உடனடியாகச் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர் எனவும் கூறப்ப டுகின்றது.

இவர்கள் பயிற்சிபெற்று சேவையில் இணையும் வரை இப்போது பொறுப்பில் இருப்பவர்கள் கடமையாற்றுவர். இக் காலப் பகுதியில் தெற்கில் பாதுகாப்புக் கடமைகளை கையாள்வதற்கென 40,000 ஊர்காவலர்கள் சேவையில் மேலதிக மாகப் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். இந்த புதிய நியமனங்களுக்கான அனுமதி மற்றும் செலவீனம் தொடர்பான அங்கீ காரம் என்பவற்றை அரசு ஏற்கனவே வழங்கியுள்ளது என வும் தெரிவிக் கப் படுகின்றது. (அ-சி)


கல்வியாண்டு-2009

★ உங்கள் பிள்ளைகள் கல்விச் செல்வத்தை இழக்காதிருக்க!
★ கட்டுப்பாட்டுடன் உயர்ச்சி பெற்றிட!

உங்கள் பிள்ளைகளை உடன் இணையுங்கள்

தரம் 4 முதல் O/L வரை
6,7- ENGLISH MEDIUM
தரம்:5 புலமைப்பரிசில் விசேட வகுப்பு.

அனுமதிகள் 05.12.2008 வரை மட்டும்

சயன்ஸ் அக்கடமி
நல்லூர். ⟷ அரியாலை.

வெற்றித் தேர்வு கௌரவிப்பு விழா புகைப் படம் தேவையானோர் உடன் தொடர்பு கொள்க: 0212229016



THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA

BIOLOGY
DAY CLASS

BATCH-I
Mon, Wed., Thu.- 6.45- 8.00

BATCH-II
Sat, Sun- 9.30- 11.00

MCQ Class
Wed - 2.30- 4.30

அனைத்து வகுப்புகளும் நேர அட்டவணைப்படி 01.12-.2008 (இன்று) முதல் நடைபெறும்...

By: ச.பொன் திவாகரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.12.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.